கர்ணாடகாவிற்காக கதறி அழும் கல்வாரி ஐக்கிய ஜெபக்குழுவும் இராணுவ சகோதரர்களும்

எஸ். தாயப்பன்



"நான் தேசத்தை அழிக்காதபடிக்குத்
திறப்பிலே நிற்கவும்
சுவரை அடைக்கவுந்தக்கதாக
ஒரு மனுஷனைத் தேடினேன்,
ஒருவனையும் காணேன்."

- எசேக்கியேல் ௨௨:30

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணையதளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

கர்நாடகாவிற்காக கதறி அழும் கல்வாரி ஐக்கிய ஜெபக்குழுவும் இராணுவ சகோதரர்களும்

எஸ்.தாயப்பன்

தேசத்தின் இரட்சிப்பிற்காக திறப்பின் வாசலில்
முழங்காலில் நின்றிட ஜெபவீரர்கள்,
வீராங்கனைகள் தேவை

நன்கொடை ரூ.5/-

கர்நாடகாவிற்காக கதறி அழும் கல்வாரி ஐக்கிய ஜெபக்குழுவும் இராணுவ சகோதரர்களும் - மே 2014 - 5000 பிரதிகள்

இந்த நூல்கள் மற்றும் விசிடி கிடைக்கும் முகவரி:
எஸ்.தாயப்பன்
12, ஜி.டி. நாயுடு தெரு, பாலாஜி அவென்யூ-1
சேலையூர் போஸ்ட், சென்னை - 600 073.
தொலைபேசி: 044 - 2234526. மின்அஞ்சல்: **sakthiprabba@yahoo.com**

நூலை அனுப்ப சில விதிகள்

ஒவ்வொரு நூலுக்கும், விசிடிக்கும் நன்கொடை ரூ.10/- + தபால் செலவு ரூ.1

MO, DD அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். உங்கள் முகவரியை **MO** பாரத்தின் அடியில் உள்ள தகவல் பகுதியில் தெளிவாக, பின்கோடு நம்பருடன் எழுதி அனுப்புங்கள். உங்கள் தொலைபேசி, செல்போன் எண்களை கண்டிப்பாக எழுதவும். செக் பெற்றுக் கொள்ளப்பட மாட்டாது. **MO, DD** பெற்றுக் கொண்ட பிறகே நூல்கள் அனுப்பி வைக்கப்படும்.

விசிடி அனுப்ப தபால் செலவு மட்டும்:

1 முதல் 15 விசிடி அனுப்ப ரூ.20/-
16 முதல் 25 விசிடி அனுப்ப ரூ.35/-

100 விசிடிக்கு மேல் மற்றும் அதிக புத்தகம் வேண்டுமானால், அவைகள் கே.பி.என். பார்சல் சர்வீஸ் மூலம் வெளியூர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

நேரில் வர:

நேரில் நூல்களைப் பெற்றுக் கொள்ள விரும்புகிறவர்கள் கிழக்கு தாம்பரம் கிறிஸ்டியன் காலேஜ் பஸ் ஸ்டாப்பிலிருந்து வேளச்சேரி மார்க்கமாக கிளம்பும் அனைத்து **M** சீரிஸ் மற்றும் வெள்ளை போர்டு பஸ்களில் ஏறி கேம்ப் ரோடுக்கு அடுத்த பஸ் ஸ்டாப்பான மஹாலட்சுமி நகரில் இறங்கவும். அல்லது ஷேர் ஆட்டோவில் ரூ.10/- கொடுத்தால் மஹாலட்சுமி நகர் பஸ் ஸ்டாப்பில் இறக்கி விடுவார்கள். இடதுபுறம் உள்ள சிட்லபாக்கம் மெயின் ரோட்டில் 1/2 கிலோ மீட்டர் உள்ளே வரவும். வலதுபுறம் **K.K.** மெடிக்கல் ஷாப்பை அடுத்துள்ள வலதுபுற ஜி.டி.நாயுடு தெருவில், இடதுபுறத்தில் இரண்டாவது வீடு.

ஒரு வேண்டுகோள்

உங்களுக்கு என்ன புத்தகம் எவ்வளவு வேண்டும் என **MO** படிவத்தில் அல்லது **EMO** வில் அல்லது கடிதத்தில் எழுதாத பட்சத்தில் எல்லா புத்தகங்களையும் நீங்கள் அனுப்பிய **MO** க்கு தகுந்தாற்போல் அனுப்ப வேண்டிய கட்டாயம் எங்களுக்கு ஏற்படுகிறது. இவைகளை தவிர்க்க உங்களுக்கு என்ன புத்தகம் தேவை என்று தெளிவாக எழுதி அனுப்புங்கள். உங்கள் டெலிபோன் / செல் நம்பர்களையும் தவறாமல் எழுதி அனுப்புங்கள். தேவை ஏற்படின் உங்களைத் தொடர்பு கொள்ள முடியும்.

ஆசிரியரின் பிற நூல்கள்:

1.	என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும் (தமிழ்)	3,10,000
2.	என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும் (கன்னடம்)	60,000
3.	என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும் (மலையாளம்)	40,000
4.	என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும் (தெலுங்கு)	10,000
5.	என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும் (ஹிந்தி)	10,000
6.	என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும் (ஒடிசா)	2,000
7.	**My Cry & Joyful New Life (English)**	45,000
8.	சித்தர்கள் கண்ட மெய்ப்பொருள்	1,05,000
9.	பாவத்தின் சம்பளம் நரகம்	85,000
10.	இயேசு கிறிஸ்து உங்களோடு பேசுகிறார்	40,000
11.	கிறிஸ்தவர்களின் 100 சந்தேகங்களுக்குப் பதில்	25,000
12.	என் ஊழியக்காரனே?	20,000
13.	இந்தியாவுக்கு இயேசு தேவை, ஏன்?	40,000
14.	சைவமும் வைணவமும் கிறிஸ்தவமே!	25,000
15.	நீங்களே எனக்கு சாட்சிகள்	10,000
16.	உண்மையான கடவுள் யார்?	15,000
17.	அற்புத சுகமளிக்கும் வைதீஸ்வரர் இயேசு	15,000
18.	இந்தியாவில் ஏன் சுவிசேஷம் முழுமையாகப் பரவவில்லை?	10,000
19.	கத்தோலிக்கர்களின் கனிவான கவனத்திற்கு - பாகம் 1	5,000
20.	கத்தோலிக்கர்களின் கனிவான கவனத்திற்கு - பாகம் 2	5,000
21.	நிறைவேறிய தீர்க்கதரிசனங்கள் - பாகம் 1	10,000
22.	நிறைவேறிய தீர்க்கதரிசனங்கள் - பாகம் 2	10,000
23.	கிறிஸ்துவை எதிர்ப்பதின் விளைவு?	10,000
24.	திருக்குறள் கூறும் இரட்சிப்பின் நற்செய்தி டாக்டர் கிறிஸ்டோபர்	5,000
25.	இந்தியா ஒரு கிறிஸ்தவ நாடு - டாக்டர் சுந்தர் ஏசுவடிவான்	3,000
26.	பாவப்பரிகாரியின் பங்கமில்லா அங்கங்கள் (பாகம் 1)	5,000
27.	பாவப்பரிகாரியின் பங்கமில்லா அங்கங்கள் (பாகம் 2)	5,000
28.	பரலோகம் செல்ல எளிதான வழி (சுவிசேஷத்தை அறிவிக்கும் முறை)	5,000
29.	நாலு வேதங்களின் நாயகர் இயேசு	5,000
30.	ஓர் அவசர அறைகூவல்	5,000
31.	கர்நாடகாவிற்காக கதறி அழும் கல்வாரி ஐக்கிய ஜெபக்குழுவும் இராணுவ சகோதரர்களும்	5,000

சீடிக்கள்

1.	**VCD.** என் அழுகையும் ஆனந்த புதுவாழ்வும் (தமிழ்)	3,10,000
2	**VCD.** என் அழுகையும் ஆனந்த புதுவாழ்வும் (கன்னடம்)	40,000
3.	**VCD.** என் அழுகையும் ஆனந்த புதுவாழ்வும் (ஹிந்தி)	25,000
4.	**VCD.** எழுந்து கட்டுவோம் (தமிழ்)	15,000
5.	**VCD.** முக்திக்கு வழி கிறிஸ்துவமே (தமிழ்)	10,000
6.	**VCD.** கதாகாலட்சேபம் (தமிழ்)	10,000

என்னுரை

பெங்களூர் கல்யாண் நகரில் 2011 நவம்பர் 25, 26, 27 தேதிகளில் Living Bread Ministries ஐ நடத்தி வருகின்ற பாஸ்டர் N.R. டேவிட் அவர்கள் என்னை அவர்களின் திருச்சபையில் சாட்சி, மற்றும் செய்தி கொடுக்க அழைத்திருந்தார். அப்பொழுது தான் அந்த ஆர்மி சகோதரர்களை பாஸ்டர் எனக்கு அறிமுகப் படுத்தி வைத்தார். படை வீரர்கள் என்பதற்கு ஏற்ப மிகவும் ஸ்மார்ட்டாக, ட்ரிம்மா, நல்ல கட்டுமஸ்தான உடற்கட்டுக்களோடு இருந்த அவர்களின் ஆர்வம், ஊழியத்திற்கு உறுதுணையாக நின்ற பாங்கு இவைகளைப் பார்த்து நான் அப்படியே அசந்து போய்விட்டேன். அறிமுகப்படுத்தப்பட்ட நான்கு பேரில் மூன்று பேர் பாஸ்டர் N.R. டேவிட்டால் கிறிஸ்துவுக்குள் பலப்படுத்தப் பட்டவர்கள். பாஸ்டரும் அவரைச் சேர்ந்தவர்களின் உற்சாகம், வழிநடத்துதலில் அவர்கள் நால்வரும் தேவனுக்காக எழுந்து பிரகாசிக்கின்ற ஒரு தீபச் சுடராக, அக்கினிப் பிழம்பாக இருந்தனர்.

பாஸ்டர் டேவிட், சிறு வணிகம் செய்யும் சகோதரர் ஜெயரத்தினம் மற்றும் அவரைப் போல ஆத்துமபாரம் உள்ள பலரையும் இணைத்துக் கொண்டு கல்வாரி ஐக்கிய ஜெபக்குழு என்கிற பெயரில் ஒரு குழுவை உருவாக்கி கர்நாடக மாநிலத்தில் உள்ள 30 மாவட்டங்களின் இரட்சிப்பிற்காகவும் பாரப்பட்டு ஜெபம் மட்டும் செய்யாமல், அந்த 30 மாவட்டங்களில் உள்ள முக்கியமான நகரங்களில் அங்குள்ள சபைகளின் ஒத்துழைப் போடு மூன்று நாட்கள் உபவாசக் கூட்டங்களையும் நடத்தி வருகிறார். அதற்காக 30, 40 பேர் அவரோடு கூட பெங்களூரிலிருந்து அந்த நகருக்கு வந்து மூன்று நாட்கள் உபவாசம் இருந்து ஜெபித்து அந்த நகரில் ஒரு பெரிய எழுப்புதல் ஏற்பட அரும்பாடுபடுகின்றனர்.

கல்வாரி ஐக்கிய ஜெபக்குழுவோடு இணைந்து இந்த நான்கு இராணுவ சகோதரர்களும் ஊழியம் செய்கின்றனர். இதற்காக இராணுவத்திலிருந்து ஒவ்வொரு முறையும் விடுமுறை எடுத்துக் கொண்டு வந்து ஊழியம் செய்கின்றனர். நம் தேசத்தின் வடக்கு, வடமேற்கு, கிழக்கு மாநிலங்களில் எல்லைப் பகுதிகளில் பணியாற்றுகின்ற இந்த இராணுவ சகோதரர்களுக்கு விடுமுறை கிடைப்பதே மிகவும் அரிது. கிடைக்கும் அந்த சில நாட்கள் விடுமுறையையும் தன் இன, ஜன பந்துக்கள், தாய், தந்தை, மனைவி பிள்ளைகளோடு உற்சாகமாகக் கழிக்காமல், இப்படி பல்வேறு மாவட்ட இரட்சிப்பின் உபவாசக் கூட்டங்களுக்கும் வந்து விடுகின்றனர்.

தேசத்திற்காக பத்து ஆண்டுகளாக உபவாசத்துடன் ஜெபித்து வந்த கல்வாரி ஜெபக்குழுவுடன் **Army Brothers Prayer Fellowship**-ம் இணைந்து 2011 ஆம் ஆண்டிலிருந்து கர்நாடகாவின் இரட்சிப்பிற்காக மாவட்டம் தோறும் வந்து மூன்று நாட்கள் உபவாசக் கூட்டத்தில் கலந்து கொள்கின்றனர். கர்நாடகாவில் உள்ள 30 மாவட்டங்களுக்கும் வருவதற்கு தீர்மானித்துள்ளனர். இதுவரை இந்த **Army Brothers Prayer Fellowship** ம் **Calvary United Prayer Fellowship** ம் இணைந்து பெங்களூர், ரெய்ச்சூர், கொல்லேஹல் மற்றும் மங்களூரில் இந்த உபவாசக் கூட்டங்களை நடத்தியுள்ளனர். இப்படி நடக்கும் ஒவ்வொரு மாவட்டத்தின் கூட்டங்களுக்கும் என்னை சிறப்புச் செய்தியாளராகச் செய்தி கொடுக்க அழைக்கின்றனர்.

இப்படி 30 மாவட்டங்களிலும் உள்ள முக்கிய நகரங்களில் எல்லாம் இதுபோன்ற கூட்டங்களை நடத்த ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர். எங்கேயோ பிறந்து, எங்கேயோ வளர்ந்த இந்தத் தமிழர்கள் அவர்கள் நம் தமிழ் நாட்டிற்காக மட்டுமின்றி, அவர்கள் தற்போது வசிக்கும், ஊழியம் செய்யும் கர்நாடக மாநிலத்தின் இரட்சிப்பிற்காகவும் உபவாசித்து ஜெபித்து வருகின்றனர். அவர்களின் தன்னலமற்ற இந்த ஊழியப் பணியைக் காணும்போது என் கண்கள் என்னையும் அறியாமல் பனிக்கின்றன. இதுபோன்று நம் தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு திருச்சபையும், நமது தமிழ் நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களுக்காகவும்,

உபவாசித்து உபவாசம் எழுப்புதல் கூட்டங்களை நடத்த வேண்டும். அப்பொழுதுதான் கால் மிதிக்கும் இடமெல்லாம் கர்த்தருக்கு சொந்தமாகும் என்கிற பாடலின் வரிகள் நிதர்சனமாகும். தேசம் கர்த்தருக்கு சொந்தமாகும். நாம் இருக்கும் இடத்தில் இருக்கிற மக்களின் இரட்சிப்பிற்காக மட்டும் நாம் ஜெபித்து ஊழியம் செய்து என்ன பிரயோஜனம்? இயேசுவை அறியாத இன்னும் எத்தனையோ கோடிக்கணக்கான ஜனங்கள் இருக்கிறார்களே. அவர்களுக்கு யார் சுவிசேஷத்தை அறிவிப்பார்கள்? நாம்தானே அறிவிக்கணும்.

நான் 58 வயதிற்குப் பிறகு ஆண்டவரை அறிந்து இரட்சிக்கப்பட்டு இன்று 71 வயதிலும் மாதம் 20 நாட்களுக்கு மேலாக எல்லா ஊர்களிலேயும், கிராமங்களிலேயும் எனது சாட்சியையும், செய்தியையும் கன்வென்ஷன் கூட்டங்களில் கொடுத்து வருகின்றேன். 2005ல் என்னை ஊழியத்திற்கென்று அழைத்த தேவனுக்காக இதுவரை 37 புத்தகங்களையும், 5 விசிடிகளையும் பத்து ரூபாய்க்கு வெளியிட தேவன் கிருபை தந்துள்ளார். என் ஊழியத்தில் சைவமும் வைணவமும் ஆதி இந்தியக் கிறிஸ்தவத்தின் கிளைகளே என்றும், இந்து மதத்திலே இருக்கிறவர்கள் அறியாமல் ஆராதிச்சுக்கிட்டு இருக்கிறது பிதா, குமாரன், பரிசுத்த ஆவியைத்தான். ஆனால் உருவகப்படுத்தி டூப்ளிகேட்டையே ஆராதிக்கின்றனர். ஒரிஜினலைப் பிடிச்சாத்தான் பரலோகம் போக முடியும்.

விக்கிரகங்களில் தெய்வம் இல்லை. அவருக்கு உருவம் கிடையாது என்று இந்து மத வேதங்களில், வேதாந்தங்களில் இருந்து ஆதாரத்தோடு நான் பிரசிங்கிப்பதால் பல்வேறு அமைப்புகளில் இருந்து எதிர்ப்புகள் இருக்கிறது. பல காவல் நிலையங்களுக்கு என்னை இழுத்துச் சென்றிருக்கின்றனர். எனது கூட்டத்தில் கல் எறிந்திருக்கின்றனர். மேடையிலேயே கழுத்தைப் பிடித்திருக்கின்றனர். கொலை மிரட்டல் கடிதங்கள் வந்துள்ளன. கன்னாபின்னா என்று கெட்ட வார்த்தை சொல்லி திட்டி கடிதங்கள், டெலிபோன் கால்கள் எல்லாம் வரும்.

தற்போது கிறிஸ்தவத்திற்கு எதிரான சில அமைப்புகள் ஒன்று சேர்ந்து என் மீது 'வெளியே வர முடியாத அரெஸ்ட் வாரண்ட்டோடு கூடிய' பொய் வழக்கை தூத்துக்குடி - சாயர்புரம் காவல் நிலையத்தில் பதிவு செய்திருக்கின்றனர். 2013 செப்டம்பர் 23, 24 தேதிகளில் தூத்துக்குடியில் உள்ள நடுவக்குறிச்சி C.S.I திருச்சபைக்காக கன்வென்ஷன் கூட்டத்தில் பேசியதைக் குறித்து நான் பேசாத வார்த்தைகளை எல்லாம் பேசியதாக புகார் எழுதி பொய் வழக்கு போட்டிருக்கின்றனர். இந்த அமைப்புகள் காவல் நிலையத்தை முற்றுகையிட்டு என்னை உடனடியாக அரெஸ்ட் செய்யவும் பிரஷர் கொடுத்து வருகின்றனர். நான் எதைக் குறித்தும் கவலைப்படவில்லை.

எனக்கு இப்போது 71 வயசு. இன்னும் எத்தனை நாட்கள், வருடங்கள் இப்பூமியில் வாழ்ந்துவிடப் போகிறேன்? நாம் எல்லோருமே ஒருநாள் மரித்துத்தான் ஆகணும். அப்படிப் போகிற உயிர் ஆண்டவருக்காக போகட்டுமே. கிறிஸ்தவனுக்கு இறப்பும் ஒரு ஆதாயம்தானே!

நான் ஒரு ஓய்வு பெற்ற விமானப்படை அதிகாரி. அந்த போர்க்குணம் இப்போதும் என்னிடம் குறையாமல் அப்படியே இருக்கிறது. முன்பு தேசத்திற்காக பணியாற்றினேன். இப்போது ஓய்வு பெற்று 71 வயதிலும் அழிந்து போகிற நம் தேசத்தின் மக்களின் இரட்சிப்பிற்காக ஓய்வின்றி ஓடிக் கொண்டிருக்கிறேன். ஆண்டவர் சகலத்தையும் நன்மைக்கு ஏதுவாக மாற்றுகின்றார். என் மீது போடப்பட்ட இந்த பொய் வழக்கு, நமது தமிழகத்தில் மோகன் சி. லாசரஸ் போன்ற பெரிய ஊழியக்காரர்கள் மத்தியில் ஒரு பெரிய எழுச்சியை ஏற்படுத்தி, இது தனி ஒரு நபர் மீது போடப்பட்ட ஒரு வழக்கு அல்ல.

இது கிறிஸ்தவத்திற்கு எதிராக எழும்புகின்ற அமைப்புகளின் எதிர்ப்புகளின் தொடக்கம். ஆரம்பம், இதுபோன்ற எதிர்ப்புகளை சட்ட ரீதியாக எதிர் கொள்ள ஒரு பலமான அமைப்பு ஒவ்வொரு மாவட்ட லெவலிலும் நமக்குத் தேவை என்கிற ஒரு அவசர உணர்வை, தேவையை உணர்த்தியிருக்கிறது. திருச்சபை ஊழியர்களின் ஐக்கியத்தை பலப்படுத்தியிருக்கிறதைக் காணும்போது மகிழ்ச்சியாக இருக்கிறது.

ஒரு ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி என்கிற முறையில் இந்த நான்கு ஆர்மி சகோதரர்களின் ஊழிய தாகத்தையும், வாஞ்சையையும் என்னால் நன்கு புரிந்து கொள்ள முடிகிறது. இந்த வாஞ்சையை, தாகத்தை உற்சாகப்படுத்தி அதை சரியான வழியில் தேசத்தின் இரட்சிப்பிற்காகப் பயன்படுத்துகின்ற கல்வாரி ஐக்கிய ஜெபக்குழுவைச் சேர்ந்த ஊழியக்காரர்களை நான் மனதாரப் பாராட்டுவதோடு அவர்களோடு இணைந்து செயல்படுகின்ற இந்த ஆர்மி சகோதரர்களின் சாட்சியையும் ஒரு நூலாக வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்த வாஞ்சை, தாகம், 'செயல் கிறிஸ்தவர்களாக' மாற நம் ஒவ்வொருவருக்கும், ஒவ்வொரு திருச்சபைக்கும் ஒரு முன் உதாரணமாக, ஒரு தூண்டுதலாக இருக்கவும் ஜெபிக்கிறேன்.

அதுமட்டுமின்றி நான் பாஸ்டர் என்.ஆர். டேவிட்டின் வீட்டில் ஊழியத்தின் நிமித்தம் மூன்று நாட்கள் தங்கி இருந்தபோது, கனடா நாட்டு எரிக்கைப் பற்றியும், அவர் பெங்களூரில் செய்த ஊழியங்கள், புட்டபர்த்தி சாய்பாபாவிடம் போய் நாலு லட்சம் பேருக்கு முன்பாக **'You are not a God. You are only a man. Jesus is God'** என்று கூறி அங்கிருந்த 4 லட்சம் பேருக்கும் சுவிசேஷத்தை அறிவித்ததின் நிமித்தம், அவரை அரெஸ்ட் செய்தது, அதனால் பாஸ்டர் டேவிட்டும், அவர் பெற்றோர்களும் அரெஸ்ட் ஆனது, பிறகு கவர்ன்மெண்ட்டே எரிக்கிற்கு கனடாவிற்கு டிக்கெட் வாங்கிக் கொடுத்து அவரை திருப்பி அனுப்பியது, மற்றும் அவரின் ஊழியத்தில் நடந்த பல அதிசய அற்புதங்களையும் அவர் கூறியபோது அப்படியே ஆடிப் போய்விட்டேன். எங்கோ பிறந்து, எங்கோ வளர்ந்த மிஷனரி களுக்கு நம் தேசத்தைக் குறித்து ஆத்தும பாரம் இருக்கிறது. ஆனால் நாமோ நிர்விசாரமாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எரிக்கைக் குறித்து பாஸ்டர் டேவிட் கொடுத்த குறிப்புகளை வைத்து அதையும் ஒரு சாட்சியாக இந்த சிறு நூலில் இணைத்திருக்கிறேன்.

நமது தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களின் இரட்சிப்பிற்காகவும், திறப்பின் வாசலில் வெறுமே ஜெபம் மட்டும் செய்யாமல் இதுபோன்ற உபவாசக் கூட்டங்களை

ஒவ்வொரு பெரிய நகரங்களிலேயும் நாமும் நடத்துவோம். அங்குள்ள அனைத்து திருச்சபைகளையும் இணைத்து அந்த ஊரின் இரட்சிப்பிற்காக உபவாசித்து ஜெபிப்போம். கர்த்தர் கண்டிப்பாக நமது ஜெபத்திற்கும், உபவாசத்திற்கும், கிரியைகளுக்கும் பதில் தந்து தேசத்தை சுதந்தரித்துக் கொள்ள வழி வாசல்களைத் திறப்பார். ஒன்றுபடுவோம், எழுந்து கட்டுவோம். தடைகளைத் தகர்த்தெறிவோம். கல்வாரி ஐக்கிய ஜெபக்குழு மற்றும் ஆர்மி சகோதரர்களின் உபவாச ஜெபம் நமக்கு ஒரு முன் உதாரணமாக இருக்கட்டும்.

கர்த்தரின் கிருபை நம்மோட ஜெபம், கிரியை ஒவ்வொன் றொடும் என்றென்றுமே இருப்பதாக!

கிறிஸ்துவின் பணியில்
உங்கள் சகோதரன்

எஸ்.தாயப்பன்

இடம்: சென்னை-73
தேதி: 25.04.2014

FOREWORD

In the year 2007, when Pastor N.R. David invited me to a prayer meeting in his home, I was deeply impressed by his systematic, detailed prayer for Bangalore. From that time I have enjoyed many times of prayer and fellowship with him.

His main focus is to pray for the salvation of souls in this country, and to encourage pastors and believers in this precious ministry of prayer.

To this end, under his guidance, the Calvary United Prayer Fellowship and Army Brothers Fellowship are tirelesly working in organising 3 days fasting and prayer conferences in Bangalore and other parts of Karnataka.

These meetings have greatly helped in uniting people of different churches to come together in prayer and fellowship.

They have also helped in motivating local leadership to cooperate, network and get involved in praying for the state and the nation.

The youth are also impacted as one young man in Raichur said, "For the Ist time, I see people from Bangalore praying with tears for my district.'

In addition to this, Calvary United Prayer Fellowship has been giving Mission awareness among Pastors and believers in Karnataka and Tamilnadu, by giving

missionary information about mission fields and its needs.

C.U.P.F. has been also dedicating in sending and financially supporting missionaries. In Ezh.22.30 God says; "And I sought for a man among them... who will stand in the gap before me for the land, that I should not destroy in. I firmly believe that C.U.P.F. is in a way fulfilling that call.

I Pray for God's blessing for the ministry of C.U.P.F.

Rev. Albert Davis

அணிந்துரை

கல்வாரி ஐக்கிய ஜெபக்குழு 2003-ம் ஆண்டு தேவ தரிசனத்தின்படி தேசத்தின் இரட்சிப்பிற்காக, கர்னாடகாவின் எழுப்புதலுக்காக தேவன் கொடுத்த தரிசனத்தின்படி தொடங்கி முதல் ஜெபத்தை பிடதியில் உள்ள கார்டன் சிட்டி ஏ.ஜி. சபையில் 2003 ஜனவரியில் மூன்று நாட்கள் உபவாசத்துடன் நடத்த தேவன் கிருபை பாராட்டினார். அதில் ஏறத்தாழ 250 பேர் சேர்ந்து கலந்து கொண்டு உபவாசித்து ஜெபிக்க கர்த்தர் கிருபை புரிந்தார். அதன் பிறகு வருஷத்திற்கு இரண்டு முறை மூன்று நாட்கள் உபவாச ஜெபத்தை நடத்த 2011ல் தேவன் தந்த தரிசனத்தின்படி பிடதி, கொல்லேகால், பெங்களூர், சாம்ராஜ் நகர், ரெய்ச்சூர், மங்களூர், உடுப்பியிலும் நடத்தி, வருகிற அக்டோபரில் தாவென்கரேயிலும் நடத்த உள்ளோம்.

கர்நாடகாவில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்தின் போதகர் களையும் சந்தித்து அந்த மாவட்டத்தின் இரட்சிப்பிற்காகவும், தேவைகளுக்காகவும், ஊழியத்திற்காகவும், தேவ ஊழியர்களின் பாதுகாப்பிற்காகவும் மூன்று நாட்கள் காலை 10 மணி முதல் 2 மணி வரை உபவாச ஜெபமும், மாலை 6 மணி முதல் 9 மணி வரை நற்செய்திக் கூட்டங்களும் நடத்த கர்த்தர் திருவுளம் பாராட்டி வருகிறார்.

எங்களோடு இணைந்து நாங்கள் செல்லும் மாவட்டங் களுக்கெல்லாம் சுவி. சகோ. தாயப்பன் அய்யாவும் வந்து அவர்களுடைய உயிர்த்துடிப்புள்ள சாட்சியின் மூலமாகவும், இந்துமத வேதங்களில் கூறப்பட்டுள்ள இயேசு கிறிஸ்துவை எடுத்துக் கூறி அவர் ஒருவர் மூலமாக மட்டுமே இரட்சிப்பு உண்டு என்கிற வல்லமையான செய்தியின் மூலமாகவும் ஒரு பெரிய எழுப்புதல், உயிர் மீட்சி ஏற்பட செய்து வருகிறார். கல்வாரி ஜெபக் குழுவைப் பற்றியும், இராணுவ சகோதரர்கள் ஜெபக் குழுவையும், கனடா நாட்டு மிஷனரி எரிக்கைப் பற்றியும் அறிந்தவுடன் அதை ஒரு புத்தகமாக வெளியிடவும், அது

பலருக்கு அனல் மூட்டுவதாக இருக்கும், அதை நானே எழுதித் தருகிறேன் என்றும் கூறி எழுதியும் தந்தார். இந்த நூலை கூடிய விரைவிலேயே கன்னட மொழியிலும் மொழிபெயர்த்து வெளியிட எண்ணுகிறோம். இந்தப் புத்தகம் பல ஊழியக்காரர்கள் மற்றும் கிறிஸ்தவர்களுக்கும் ஆத்தும பாரத்தைத் தரும் என்பது நிச்சயம்.

கல்வாரி ஜெபக்குழுவுடன், எங்கள் ஜீவ அப்ப சபையின் அங்கத்தினர்களான இராணுவத்தில் பணி புரிந்து கொண்டு இருக்கிற சகோதரர்கள் அந்தோணி ராஜேஷ், குமாரசாமி என்கிற பால் அகியா, ஜோதிலிங்கம், செல்லமுத்து ஆகிய நால்வருக்கும் அழிந்து போகிற ஆத்துமாக்களைக் குறித்த ஒரு தாகம் இருந்தபடியால் இவர்களும் 'இராணுவ சகோதரர்கள் ஜெப இயக்கம்' என்கிற பெயரில் ஒரு ஜெபக் குழுவை ஆரம்பித்து கல்வாரி ஐக்கிய ஜெபக் குழுவுடன் இணைந்து எல்லா மாவட்ட உபவாசக் கூட்டத்திலும் கலந்து கொண்டு வருகிறார்கள்.

நாங்கள் செல்லும் மாவட்டத்திற்கெல்லாம் பாஸ்டர்கள் ஜெயரத்தினம், உதயகுமார், வின்சென்ட் பால், கொல்லேகால் வின்சென்ட் அமலதாஸ், ரெய்ச்சூர் பாஸ்டர் ஜோனஸ் ஜேம்ஸ் மற்றும் சகோதரர்கள் சைமன் பால், லூக்காஸ், ஜான்ராஜ், சாமுவேல், சகோதரி சாந்தி இன்னும் பல தேவப் பிள்ளைகளும் எங்களுடன் இணைந்து கர்நாடகாவிற்காக முனைப்புடன் உபவாசித்து ஜெபித்து வருகின்றனர்.

ஆந்திரா, கேரளா, தமிழ்நாடு மாநிலங்களைக் காட்டிலும் கர்நாடக மாநிலம் கிறிஸ்தவ வளர்ச்சியில் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே இருக்கிறது. கர்நாடகாவில் 30 மாவட்டங்கள், 181 தாலுகா, 31270 கிராமங்கள், 14 பெரிய ஜாதிகள், 19 பெரிய மொழிகள் இருக்கின்றன. இங்கு படித்தவர்கள் 68%, இந்துக்கள் 80%, இஸ்லாமியர்கள் 12%, கிறிஸ்தவர்கள் 3%, புத்த மதம் 2%, இதர ஜனங்கள் 2%. சிறுவர்களின் திருமணம், தேவதாசி முறை, விக்கிரஹங்களுக்கு குழந்தைகளைப் பலியிடுதல் போன்ற பல மூட பழக்க வழக்கங்களிலேயும், பாவக் காரியங்களிலேயும் கர்நாடகா மூழ்கிக் கிடக்கிறது. ஜெபத்தின் வல்லமையினால் மட்டுமே கர்நாடகாவை கர்த்தரின் சமூகத்திற்குக் கொண்டு வர

முடியும் என்கிற முனைப்புடன் செயல்படும் கல்வாரி ஐக்கிய ஜெபக்குழு மற்றும் இராணுவ சகோதரர்கள் ஜெபக்குழுவை தேவன்தாமே தமது சித்தத்தின்படி எடுத்து நடத்துவாராக.

இந்த ஜெபக் குழுக்களுக்காக தொடர்ந்து ஜெபியுங்கள். இதுபோன்று நம் தேசத்திலுள்ள ஒவ்வொரு கிறிஸ்தவர்களும் ஊழியக்காரர்களும் சபைப்பாகுபாடின்றி இணைந்து ஒவ்வொரு மாநிலத்திற்காகவும், திருச்சபைகளுடன் இணைந்து தேசத்திற்காக உபவாசித்து ஜெபித்தால் கர்த்தர் கண்டிப்பாக மனமிரங்கி நம் தேசத்தை சந்திப்பார் என்பதில் சந்தேகமே இல்லை.

ஜெபத்துடன்

என்.ஆர். டேவிட்

சீனியர் பாஸ்டர்
ஜீவ அப்ப ஊழியங்கள்
கல்வாரி ஐக்கிய ஜெபக்குழு மற்றும்
இராணுவ சகோதரர்கள் ஜெபக்குழு
பிளவர் கார்டன், பாபுஸா பாலையா
கல்யாண் நகர், பெங்களூர் - 560 043. கர்நாடகா
செல்: 9482477275

தேதி: 14.4.2014

கர்த்தருக்கு செல்லமான ஒரு முத்து

''கர்த்தர் தன் பிள்ளைகளுக்குப் போதித்து அவர்கள் நடக்க வேண்டிய வழியைக் காட்டுவார்; அவர்கள் மேல் தன் கண்ணை வைத்து, அவர்களுக்கு ஆலோசனை சொல்லுவார்.''

- சங். 32:8



நான் ஒரு சாதாரண, ஏழ்மையான எளிமையான குடும்பத்தில் பிறந்தவன். என்னுடைய தகப்பனாருக்கு நான் மூன்றாவது பிள்ளை. எனக்கு மூத்த இரண்டு சகோதரர்கள் இருக்கிறார்கள். மேலும் ஒரு சகோதரியும், இருக்கிறாள். என் தாய் மூன்றாவதாக கருவுற்ற போது மூன்றாவது குழந்தை பெண் பிள்ளைதான் வேண்டுமென்று வேண்டிக் கொண்டார்கள். பெண் பிள்ளை தான் பிறக்கும் என்று மிகவும் எதிர்பார்த்தார்கள். ஆனால் ஆண்டவர் மூன்றாவதும் ஆண் பிள்ளையாகக் கொடுத்தார். குடும்பத்தில் சந்தோஷத்திற்கு அளவே இல்லை. அந்த சந்தோஷத்தால் தான் எனக்கு செல்லமுத்து என்று பெயர் சூட்டினார்கள். மிகவும் பாசத்தோடும், அன்போடும் என்னை வளர்த்தார்கள். எனக்கு 5 வயது இருக்கும் போது என்னுடைய குடும்பத்தின் கஷ்டத்தையும், பாரத்தையும் உணர ஆரம்பித்தேன்.

நான் பிறப்பதற்கு முன்பும் குடும்பம் மிகவும் கஷ்டத்தில்தான் இருந்து கொண்டிருந்தது. எனது தகப்பனார் படிப்பறிவு

இல்லாதவர். அவர் ஐந்தாம் வகுப்பு வரைதான் படித்துள்ளார். தாயும் ஆறாம் வகுப்பு வரைதான் படித்துள்ளார். பிள்ளைகளை எப்படி வளர்க்க வேண்டும் என்ற திட்டம் அவர்களிடம் இல்லை. மிகவும் வறுமையான சூழ்நிலையில்தான் ஏங்களை வளர்த்தார்கள். குடும்பத்தைக் குறித்து எனக்கு மிகவும் கவலையாக இருந்தது. ஏன் நமது குடும்பத்திற்கு இவ்வளவு கஷ்டம், வேதனை என்று எண்ணி நான் மிகவும் கலங்கி அழுவேன். குடும்பத்தில் சந்தோஷம், சமாதானம் என்பதே கிடையாது. எங்களுடைய தகப்பனார் எங்கள் ஐவரையும் வளர்த்து ஆளாக்க மிகவும் கஷ்டப்பட்டார்.

அநேக கஷ்டங்களின் மத்தியில் அவர் எங்களை வளர்த்தார். அவர் செய்யாத வேலைகளே கிடையாது. அந்த கஷ்டத்திலும் கூட எங்களை பரிசுத்தத்தின் பாதையில் வளர்க்க பிரயாசப் பட்டார். கிறிஸ்தவத்தின் பாதையில் நல்ல போதனையைக் கற்றுக் கொடுத்தார். தவறான பாதையில் சென்று விடாதபடி எங்களைப் பார்த்துக் கொண்டார். நல்லது, கெட்டது, என்ன செய்ய வேண்டும், என்ன செய்யக் கூடாது என்று எங்களுக்கு கற்றுக் கொடுத்தார். ஒவ்வொரு நாளும் குடும்ப ஜெபம் செய்து வந்தோம். அந்த ஜெபத்தில் துதி பாடல்கள், வேத வாசிப்பு அதன் பிறகு ஜெபம் செய்து வந்தோம். வேத வசனத்தைப் பற்றி எங்கள் தகப்பனாருக்கு தெரிந்தவரை எங்களுக்குக் கற்றுக் கொடுத்தார்.

நாங்கள் படித்தது சாதாரண அரசுப் பள்ளியில்தான். அப்பா, என்னுடைய அம்மாவை எந்த வேலைக்கும் அனுப்புவதில்லை. என்றாலும் அப்பாவுக்குத் தெரியாமல் அம்மா தினமும் கூலி வேலைக்குச் சென்று வருவார்கள். இப்படியாக நாங்கள் பட்ட கஷ்டத்திற்கு அளவே இல்லை. உடுத்த சரியான உடையில்லாமல், உண்ண சரியான உணவு இல்லாமல் மிகவும் ஏழ்மையான நிலையில் இருந்தோம்.

எப்படியாவது குடும்பத்தை ஒரு நல்ல நிலைக்கு கொண்டுவரவேண்டும் என்ற எண்ணத்தில் இரவும், பகலுமாக என் பெற்றோர் உழைத்தார்கள். நாங்கள் கண்ணீர் வடிக்காத

நாளில்லை. ஒவ்வொரு நாளும் குடும்ப கஷ்டத்தை நினைத்துக் கண்ணீர் விட்டு அழுது கொண்டிருப்போம். இவைகளுக்கு மத்தியில் எங்கள் அப்பா செய்த மிகப் பெரிய நல்ல காரியம் என்னவென்றால், அவருடைய கடவுள் நம்பிக்கையின் காரணமாக எங்களையும் கர்த்தருடைய பாதையில் வழிநடத்தினார். ஒவ்வொரு நாளும் இரவு வேளையில், குடும்ப ஜெபம் செய்யாமல் இருந்தது இல்லை.

அப்பாவுக்கும், அம்மாவுக்கும் கடவுள் மீது அதிகளவு நம்பிக்கை இருந்தது. ஆண்டவர் நம் குடும்பத்தைக் கண்டிப்பாக ஒரு நல்ல நிலைமைக்கு உயர்த்துவார் என்ற நம்பிக்கை இருந்தது. அனுதினமும் வேத வாசிப்பு, ஸ்தோத்திரப் பாடல்கள் பாடுவது, ஜெபம் என நாட்கள் கடந்தது. நாங்களும் அம்மா அப்பா வழியில் பக்தியோடு வளர்ந்தோம்.

ஒன்றை மட்டும் நாங்கள் உணர்ந்தோம். அதாவது, கர்த்தரை முழுவதுமாகப் பற்றிக் கொண்டால், நம் குடும்பம் கர்த்தரால் உயர்த்தப்படும் என்ற நம்பிக்கையிருந்தது. அந்த நம்பிக்கை வீண் போகவில்லை. ஆண்டவர் எங்களுடைய கஷ்டங்களை ஒவ்வொன்றாக மாற்றித் தந்தார்.

கர்த்தர் கிருபையால் நாங்கள் ஏறெடுத்த ஜெபம் வீண் போகவில்லை. குடும்பத்தின் வறுமைகள் மாறத் தொடங்கின. குடும்பம் தாழ்விலிருந்து உயர்வை நோக்கிச் சென்றது. ஆண்டவர் அடியேனுக்கு செய்த நன்மைகளை ஒவ்வொன்றாக நான் சொல்ல விரும்புகிறேன்.

எனக்கு ஆறு வயது இருக்கும்போதே குடும்பத்தின் கஷ்டத்தை உணர்ந்தேன். என்னுடைய சிறு வயதிலேயே கஷ்டம் என்னவென்பதை தெளிவாக உணர்ந்தேன். அப்போதிலிருந்தே ஆண்டவர் சமூகத்தில் கண்ணீர் விட்டு அழுது ஜெபித்த அனேக வேளைகள் உண்டு. இவ்வாறாக வறுமையிலேயே வாழ்ந்த நான் ஆண்டவரை விசுவாசிக்க ஆரம்பித்தேன்.

ஒன்றாம் வகுப்பிலிருந்து 10 வகுப்பு வரை உடுத்துவதற்கு உடை அணிவதற்கு காலணி கூட இல்லாமல் என் சகோதரருடையதையே அணிந்து செல்வேன். இவ்வாறாக வறுமை என்னை வாட்டியது.

வாலிபப் பருவத்தில் ஆண்டவருடைய பலத்த கரத்தினுள் அடங்கியிருந்ததால் 10ம் வகுப்பு முடித்தவுடனேயே இராணுவத்தில் வேலை கிடைக்கும்படி ஆண்டவர் எனக்கு உதவி செய்தார். அதன் மூலமாக என்னுடைய கஷ்டங்கள் யாவும் மாறத் துவங்கின. ஏறத்தாழ 32 வருடங்களாக ஆண்டவர் எனக்கு அனேக நன்மைகள் செய்திருக்கிறார்.

1. என் வாலிபப் பருவத்தை பரிசுத்தமாக பாதுகாத்துக் கொள்ள கிருபை செய்தார்.
2. இராணுவத்தில் சேரக் கிடைத்த பாக்கியம்.
3. நல்ல, எனக்கு ஏற்ற துணைவி கிடைக்கவும், எங்களுக்கு இரண்டு குழந்தைச் செல்வத்தைக் கொடுத்தும் ஆசீர்வதித்தார்.

இவ்வாறு ஒவ்வொன்றாக அவர் எங்களுக்கு செய்த நன்மைகளுக்கு அளவேயில்லை. எல்லாவித ஆசீர்வாதத்தினாலும் எங்களை நிரப்பினார்.

இவ்வாறாக ஆண்டவர் எனக்குச் செய்த நன்மைகளை நினைத்து, அதற்கு கைம்மாறாக நானும் கடவுளுக்கு உகந்த ஏதாவது செய்ய வேண்டுமென்று ஒரு எண்ணம் என்னுள் இருந்து கொண்டேயிருந்தது. அதன் அடிப்படையில் தான் நானும் என்னோடு சேர்ந்த நான்கு பேரும் சேர்ந்து ஆண்டவருக்கு Army Brothers Prayer Fellowship என்ற ஒரு ஸ்தாபனத்தை நிறுவினோம்.

இந்த ஸ்தாபனம் இப்போது கர்நாடகாவில் நல்ல முறையில் இயங்கிக் கொண்டிருக்கிறது. இதனுடைய நோக்கம்,

ஆண்டவரை அறிந்திராத மக்கள் மத்தியில் அவருடைய நாமத்தை அறிவிப்பது. இந்தியா இயேசுவுக்குச் சொந்தமாகணும் என்ற நோக்கத்தோடு இயங்கிக் கொண்டிருக்கின்றது.

இயேசுவை அறிந்த ஒவ்வொருவரும் கர்த்தருக்கு ஊழியம் செய்யணும். அதைவிட ஒரு உன்னதமான பணி இவ்வுலகில் வேறு ஒன்றுமே இல்லை. **'மனம் திரும்புகின்ற ஒரே ஒரு பாவியின் நிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்குமே'** என்று வேதம் கூறுகிறதே.

தேசத்தின் இரட்சிப்பிற்காக கதறிடும்
உங்கள் சகோதரன்,

செல்லமுத்து

இருளில் இருந்து பிரகாசத்துக்கு வந்த குமாரசாமி

என் பெயர் K. குமாரசாமி. நான் இந்து மதத்தைச் சேர்ந்தவன். இயேசு கிறிஸ்துவை அறியாத நாளில் நான் மிகவும் பாவத்தில் வாழ்ந்து வந்தேன். உலகத்தின் ஆசையில் சிக்குண்டு பல துன்மார்க்கமான பாவங்களைச் செய்து வந்தேன்.

நான் 1992 ஆம் வருடம் 9ஆவது வகுப்பில் பெயிலில் ஆனேன். அப்போது என் தந்தை நீ 9 வகுப்பு பாஸ் ஆகிவிட்டாயா என்று என்னிடம் கேட்டார். நான் பாஸ் ஆகிவிட்டேன். அடுத்த வகுப்புக்குச் செல்கிறேன் என்றேன். அவரும் என் மேல் மிகவும் நம்பிக்கை வைத்து இருந்தார். ஆதலால் அதை அவர் நம்பி விட்டார்.

விடுமுறை கழிந்து, பள்ளி துவங்கியது. நான் பள்ளிக்குச் செல்கிறேன் என்று சொல்லி தினமும் சினிமாவுக்குச் சென்று விடுவேன். என் தந்தையோ பிள்ளை 9 ஆம் வகுப்பு சென்றிருக்கிறான். அவனைப் பள்ளியில் பார்த்து வருவோம் என்று நினைத்து பள்ளிக்கு வந்திருக்கிறார். பள்ளியில் என்னைப் பற்றி வகுப்பு ஆசிரியரும், சக மாணவர்களும் கூறினார்கள். அவன் 9 ஆம் வகுப்பில் பெயிலில் ஆகிவிட்டான் என்றும், அவன் பள்ளிக்கு வருவது இல்லை. வகுப்பில் ஆசிரியர்களை கேலி செய்வான். புகை பிடிப்பான். சினிமாவுக்குச் சென்று விடுவான். இப்போது கூட அவன் சினிமாவுக்குத்தான் சென்றிருப்பான் என்று சொல்லிவிட்டார்கள்.

எப்படியிருக்கும் என் தந்தைக்கு? அவர் என் மீது வைத்த நம்பிக்கையின் நிமித்தம் அவர் அங்கு மிகவும் மனவேதனை அடைந்து எல்லோர் முன்னும் வெட்கித் தலைகுனிந்து அவமானம் அடைந்தார். நான் சினிமா பார்த்து விட்டு வீட்டுக்கு சென்றேன். என் சகோதரன் என்னைப் பார்த்து ஏன் அண்ணா இப்படிச் செய்தாய்? உன்னைப் பற்றி அப்பாவுக்கு எல்லாம் தெரிந்து விட்டது. அவர் உன் மீது மிகவும் கோபமாக இருக்கிறார் என்றான். நான் அதையறிந்து கலக்கம் அடையாமல், முரட்டு தைரியத்துடன் என்ன செய்வார் என்று பார்க்கலாம் என்று எண்ணிக் கொண்டு சென்றேன்.

என் தந்தை என்னைப் பார்த்து நீ 8 ஆம் வகுப்பு பாஸ் ஆகிவிட்டாயா என்று கேட்டார். நான் மிகவும் வறட்டுத் தைரியத்தோடு இல்லை என்று சொன்னேன். அதற்கு அவர் உன்னை குறித்து பள்ளி ஆசிரியர் சொன்னார். உன் கேரக்டர் குறித்தும் சொன்னார். உன்னை அடிக்கவோ, திட்டவோ நான் ஒன்றும் செய்ய மாட்டேன். உனக்குப் புத்தி சொல்லவும் எனக்குப் பிரியம் இல்லை. உன் மீது வைத்த நம்பிக்கை எல்லாம் அற்றுப் போனது. உன் மீது எனக்கு வெறுப்பும், கசப்பும்தான் இருக்கிறது என்று சொல்லி, நீயே திருந்தினால் தான் உண்டு, உன்னை யாரும் திருத்த முடியாது, உன் மனச்சாட்சியைக் கேட்டுப் பார், நீ செய்தது நல்லதா, கெட்டதா என்று சொல்லி. அதில் இருந்து அவர் என்னிடத்தில் பேசுவது இல்லை. என் குடும்பத்தில் உள்ளவர்கள் அனைவரும் என்னை ஒரு எதிரியாகப் பார்த்தார்கள்.

சில நாள் சென்றது. நானும் இவர்கள் (என் குடும்பத்தினர்) எத்தனை நாள் இப்படி இருப்பார்கள், பார்க்கலாம் என்று நினைத்தேன். ஒருநாள் பள்ளிக்குச் சென்றேன். ஆசிரியர் சக மாணவர்களிடத்தில் அவனிடம் யாரும் சேராதீர்கள். அவன் பொய்யன். அவனிடத்தில் கெட்ட பழக்க வழக்கங்கள் நிறைய இருக்கின்றன என்று சொல்லி என்னை அசிங்கப்படுத்தினார். மாணவர்களும் என்னிடத்தில் பேசவும், பழகவும் மாட்டார்கள். வீட்டிற்குச் சென்றால் அங்கும் யாரும் என்னிடத்தில் பேச மாட்டார்கள். நான் செய்த தவறுகளை குறித்துக் கூறிக் கொண்டே இருப்பார்கள். இப்பொழுது பள்ளியில் ஆசிரியர்கள், மாணவர்கள்

என்னை குறை கூறுகிறார்கள். நான் என்னுடைய தவறுகளை உணர ஆரம்பித்தேன்.

நான் செய்த தவறான காரியத்தை நினைக்கும்போது எனக்கு என்மேலேயே வெறுப்பு வந்தது. மற்றவர்களைப் பார்த்து பேசவும் கூட எனக்கு தகுதியில்லாமல் போனது. அந்த அளவுக்கு நான் என் பெற்றோருக்கு நம்பிக்கைத் துரோகம் செய்து இருக்கிறேன். இனிமேல் எப்படி அவர்களிடத்தில் அந்த நம்பிக்கையை பெறுவேன். நல்லவன் என்று பெயர் எடுப்பது கடினம். கெட்டவன் என்று பெயர் எடுப்பது மிக மிக சுலபம். எங்கு சென்றாலும் நிம்மதி இல்லை. ஆறுதல் இல்லை. அன்பாய் பேசவும், அன்பு காட்டவும் ஒருவரும் இல்லையே என்று மிகவும் மனவேதனை அடைந்தேன்.

ஒருநாள் இந்த சூழ்நிலைகள் என்னை மிகவும் வாட்டியது. மரித்து விடலாம் என்ற எண்ணமும் எனக்குள் எழுந்தது. அதற்கும் துணிந்து இந்த உலகத்தில் வாழ்வதை விட மரித்துப் போவது மேல் என்று எண்ணி அதைச் செய்யவும் துணிந்தேன். மதியம் ஒரு 3.30 மணி அளவில் வீட்டில் அனைவரும் உறங்கிக் கொண்டிருந்தார்கள். நான் அனைவரையும் கடைசியாகப் பார்த்து விட்டு வரலாம் என்று எண்ணி முதலில் என் தாயும், தகப்பனையும் பார்த்து, பின் என் சகோதரியையும் பார்த்து கடைசியாக என் சகோதரனையும் பார்த்துவிட்டு அங்கே கண்ணீர் மல்க அழுதேன். பிறகு அங்கிருந்து போகலாம் என்று எழுந்த போது, என் சகோதரன் முகத்தில் ஒருவிதமான வெளிச்சம், பிரகாசத்தைக் கண்டேன். ஒரே ஒரு நொடிதான். அந்தப் பிரகாசத்தைக் கண்டேன் அவன் என் உள்ளத்தில், நீ வாழ வேண்டும், உன்னை கொண்டு பல காரியங்கள் செய்ய வேண்டும் என்ற வார்த்தை என் இருதயத்தில் ஒலித்துக் கொண்டு இருந்தது.

எனக்கு ஒன்றும் புரியவில்லை. இது யார் சொன்னது. இந்த பிரகாசம் எப்படி வந்தது என்று நான் சிந்தித்துக் கொண்டே யிருக்கையில் மரிக்கலாம் என்ற என் எண்ணம் மாறியது. மறுநாள் நான் பள்ளிக்குச் சென்றேன். என் உள்ளத்தில் அந்த நிகழ்ச்சியை எண்ணிக் கொண்டு இருந்தேன். அப்போது 8 ஆம் வகுப்பில்

ஜோஸ்வா என்ற புதிய மாணவன் அட்மிஷன் ஆனான். அவன் என்னை குறித்து கேள்விப்பட்டு 3 நாள் கழித்து என்னிடம் பேசினான். அதுவரை என்னிடம் யாரும் பேசாத அன்பான வார்த்தைகளைப் பேசினான். அன்புக்கு ஏங்கிக் கொண்டிருந்த நிலையில் அந்த அன்பான வார்த்தைகளைக் கேட்டு என்னை அவன் நேசிக்கும் பொழுது, நான் கண்ணீர் விட்டு அழுதேன்!

அவர் என்னைக் குறித்தும், நான் செய்த தவறுகள் குறித்தும் என் வீட்டின் நிலைமையையும், பள்ளியில் எனக்கு ஏற்படுகிற நிலைகளையும் அவன் அறிந்து இயேசு கிறிஸ்துவைக் குறித்து எனக்கு கூறினான். இயேசு யார், அவர் எதற்காக மரித்தார், என்னோட கூட பேசின அந்த வார்த்தை பிரகாசம் குறித்தும் கூறினான்.

அதுவரை அந்த பிரகாச வார்த்தை குறித்து எனக்கு விடை தெரியாமல் இருந்தது. அதை புரிய வைத்த அந்த நண்பன் உண்மையான கடவுள் இயேசு ஒருவரே என்று எனக்கு புரியவும் வைத்தான். அதுமட்டும் இன்றி எப்படி ஜெபிப்பது, துதிப்பது, ஆராதனை செய்வது என்று எல்லாம் அவன் தெரியப் படுத்தினான்.

அதுவரை என் வீட்டில் என்னிடத்தில் பேசாதவர்கள் என்னிடத்தில் பேசினார்கள். பள்ளியில் மாற்றமும் ஏற்பட்டது. அதுமுதல் ஆண்டவர் என்னை தொட்டுப் பலப்படுத்தினார். வேதத்தைப் படிக்க ஆரம்பித்தேன். எப்படி ஒரு தாய் தன் குழந்தையைக் கையைப் பிடித்து நடத்திச் செல்கிறாரோ அதுபோல் வேதத்தின் மூலமாய் அவர் எனக்கு ஒவ்வொன்றாகக் கற்றுக் கொடுத்தார். வேதத்தின் அர்த்தங்களையும், புரிந்து கொள்ளும்படியான ஞானத்தையும் கொடுத்தார். தேவ மனிதர்களின் ஐக்கியமும், அவர்களுடன் இணைந்து ஜெபிக்கும் சிலாக்கியத்தையும் கொடுத்தார். சபைகளுக்கும் ஊழியக் கூட்டங்களுக்கும் செல்ல வகை செய்தார். சில அனுபவங் களையும் எனக்குக் கொடுத்தார்.

அக்டோபர் 2011 இல் பாஸ்டர் என்.ஆர். டேவிட் அவர்களின் வாயிலாக ஞானஸ்நானம் எடுக்க தேவன் கிருபையளித்தார்.. ஞானஸ்நானம் எடுத்த பிறகு தான் என் வாழ்க்கையில் மலை

போல் வருகின்ற பிரச்சனைகளை அவர் நொடிப் பொழுதில் ஒன்றுமில்லாமல் ஆக்கினார். தேவனோடு வாழும் வாழ்க்கையில் எனக்கு சமாதானத்தையும் ஆறுதலையும், வளர்ச்சியையும் அளிக்கின்றார். நாம் வேதனைப்படும்போது, அவர் சகல விதத்திலும் நமக்கு உதவி செய்கிறார்.

புற ஜாதியாய் இருந்த என்னை கிறிஸ்து தம்முடைய பிள்ளையாய் மாற்றினார். குமாரசாமியாய் இருந்த என்னை பால் அகியாவாக மாற்றினார். அன்றைக்கு அந்த வெளிச்சம், பிரகாசம் நீ வாழ வேண்டும், உன்னைக் கொண்டு பல காரியங்கள் செய்ய வேண்டும் என்று உணர்த்தின வார்த்தைகள் இன்று நிறைவேறிக் கொண்டிருக் கிறது.

ஆம் நம்மை அழைத்தவர் உண்மையுள்ளவர். அவர் பரிசுத்தர். அவர் அளித்த கிருபைகளும், அழைப்புகளும் மாறாதவைகளே!

அசுத்தமும், பாவ உள்ளமும் கொண்ட என்னை, தேவனுடைய வார்த்தையினால் என்னை மாற்றினார். கர்த்தருக்கு கோடானு கோடி நன்றி.

நான் உலகப் பிரகாரமாய் வாழும் போது அடைந்த சந்தோஷம் எல்லாம் மாயை. அதில் பயம் இருந்தது. ஆனால் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட பிறகு அவர் சமூகத்தில் வாழும் போது அது நித்திய நித்திய சந்தோஷத்தைத் தருகிறது. அது என்றென்றும் நிலைத்து இருக்கிறது. தேவனுக்கு பயந்து நடக்கும்போது, அவர் என்னை வாழ்க்கையில் படிப்படியாக உயர்த்தினார். ஏற்ற காலத்தில் நாம் உயர அவரின் பலத்த கரங்களுக்கு அடங்கியிருங்கள் என்று வசனம் சொல்லுவது போல் அவர் கரத்தில் அடங்கி இருந்த என்னை இயேசு உயர்த்தினார்.

இன்று அவருடைய கிருபையினாலும், இரக்கத்தினாலும், எனக்கு ராணுவத்தில் நல்ல பதவியிலும் இருக்க அவர் எனக்கு அனுக்கிரகம் பண்ணினார். ஒன்றுக்கும் உதவாத என்னை நான் பணிபுரியும் இடத்தில் அவருடைய நாமத்தை சொல்ல எனக்கு அனுக்கிரகம் பண்ணினார். தேவனுடைய ஊழியக்காரரின் ஆலோசனையும், தேவ சகோதரர்களின் ஐக்கியமும் எனக்கு

உண்டு பண்ணினார். என்னைப் போல இராணுவத்தில் நிறைய சகோதரர்கள் இருக்கிறார்கள். ஆண்டவருக்கு என்று ஒரு படி முன் செல்லும் போது தான். ஆர்மி பிரதர்ஸ் என்ற ஊழியத்தை உண்டு பண்ணினார். இதில் இருக்கும் சகோதரர்கள் பல திசைகளில் பணிபுரிபவர்கள். ஒருவருக்கொருவர் யார் என்று கூட தெரியாது. ஆனால் எங்களுடைய எண்ணமும், சிந்தனையும் ஒன்றாகவே இருக்கிறது. அதை தேவன் தெரிந்து கொண்டார். அவருடைய கிருபையினால் எங்களை ஒன்று சேர்த்தார். அவர் ஊழியத்தை செய்யவும் வைக்கிறார். இயேசுவை நோக்கிப் பார்த்த முகங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டு போனதில்லை. பிரகாசம் அடைந்தது என்று வேதம் கூறுகிறது. இருளில் வாழ்ந்த என்னை தேவன் ஒரு பிரகாசமான வாழ்விற்கு கொண்டு வந்து உயர்த்தியிருக்கிறார். கர்த்தருக்கு நன்றி!

நீங்களும் இயேசுவை சொந்த ரட்சகராக ஏற்றுக் கொண்டு அவருக்கு ஊழியம் செய்து பாருங்கள். கர்த்தர் உங்களையும் அபரிமிதமாக உயர்த்துவார்.

இப்படிக்கு
உங்கள் அன்பு சகோதரன்

பவுல் அகியா

ஜோதி லிங்கத்தை உயர்த்திய உன்னத தேவன்

என் பெயர் V. ஜோதிலிங்கம். நான் ஒரு இந்துக் குடும்பத்தைச் சேர்ந்தவன். ஆனாலும் நம் தேவனாகிய கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களை வழி நடத்திச் சென்றபோது புற ஜாதிகளையும் கர்த்தர் மேல் பிரியமாய் இருந்தவர்களையும் பாதுகாத்து ரட்சித்து என்னையும் என் வாழ்வில் தெரிந்து கொண்டு வழி நடத்திச் செல்கின்றார்.

தேவன் என் வாழ்வில் நிறைய அற்புதங்களைச் செய்தார். அதைக் காட்டிலும் என் தேவன் என் வாழ்க்கையில் இருந்த சாத்தானின் எண்ணங்களை அழித்தார். தேவனுக்குள் என்னை அர்ப்பணித்த பிறகு நல்ல குணாதிசயங்கள் என் வாழ்வில் வந்தன. ஒழுக்கம், பிறர்க்கு தீங்கு செய்யாமை, நம்மால் இயன்ற உதவிகளைச் செய்தல், பிறரிடம் அன்போடு பேசும் ஒழுக்கம், இதை எல்லாம் தேவன் எனக்குக் கற்றுத் தந்தார்.

ஆண்டவர் முதலாவதாக என் மூத்த சகோதரரை தமக்கென்று தெரிந்து கொண்டார். பின்பு அவர் மூலமாக என்னைத் தொட்டார். இராணுவ வாழ்க்கையில் அநேகர் வேலை செய்கிறார்கள். அவர்களுடன் ஒருவனாக நானும் இருந்தேன். பின்பு தேவனின் கிருபையினால் எனக்கு இராணுவத்தில் Drill Course கிடைத்தது. ஆனால், அந்த Course செய்வதற்கு தகுதியற்றவனாக நான் இருந்தேன். ஏனென்றால் நான் எனது Basic Training கில் Drill செய்வதற்கு திறமையற்றவனாக இருந்தேன். ஆனாலும் தேவன்

எனக்கு அந்த **Course** ஐ தந்தார். நானும் தேவன் மேல் நம்பிக்கை வைத்து **Course-** இல் சேர்ந்தேன். ஆறு வாரம் நடக்கும் மிகவும் கடினமான ஒரு **Course** அது. அந்த கோர்ஸில் மொத்தம் 72 பேர் இருந்தனர். அந்த கோர்ஸை கம்ளீட் செய்ய வேண்டும் என்றால், முதலில் ஷார்ட் கோர்ஸ்சை ஆறு வாரம் முடிக்க வேண்டும். அதில் தேர்வானவர்களை **Long Course** க்கு அனுப்புவார்கள். அதில் நம் திறமைக்கேற்ற கிரேட் கிடைக்கும். நான் செய்த கோர்ஸில் இரண்டு காலியிடங்கள் மட்டும் இருந்தன. என் கோர்ஸில் அநேகர் திறமைசாலிகளாக இருந்தனர். நானோ திறமையற்றவனாக இருந்தேன். ஆனால் தேவன் மேல் நம்பிக்கை கொண்டிருந்தேன். **Short Course** ல் மூன்றாம் வாரத்தில் **Mid term Test** ஒன்று நடக்கும். அந்த **Test** ல் 63 வதாக இருந்தேன். என் தேவன் என்னை எப்படியும் **Long Course** க்கு அனுப்புவார் என்ற நம்பிக்கையில் இரவு பகலென பார்க்காமல் உழைத்தேன். அந்த உழைப்பிற்கு அற்புதமான கிருபையைத் தந்தார். அந்த **course** முடியும் போது 63வதாக இருந்த நான் **Final Test** க்கு வந்த உயர் அதிகாரி என்னை முதலாவதாக தேர்ந்தெடுத்தார். பின்பு **long course** சென்று அங்கு எனக்கு என் உழைப்பிற்கேற்ற **grading** ஐ தந்தார். இராணுவத்தில் 10ல் ஒருவனாக இருந்த என்னை கர்த்தர் உயர்ந்த இடத்தில் வைத்தார். இன்னும் அநேக அற்புதங்களை என் இராணுவ வாழ்க்கையில் செய்தார்.

என் உலக வாழ்க்கையில் எனக்கு அருமையான குடும்பத்தினை தந்தது போல மிக முக்கியமாக திருமண வாழ்க்கையும் பல பிரச்சினைகளின் நடுவே தேவன் என் மூத்த சகோதரர் மூலமாக என் விருப்பப்படி திருமணத்தினையும் நடத்தி வைத்தார். நான் ஒன்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எனக்கு முன்னின்று வழி நடத்தின சகோதரருக்கு அப்போது திருமணம் ஆகாமல் இருந்தது. என்னை இளையவன் என்றும் பார்க்காமல் எல்லா இன்னல்களையும் தாங்கி அவரே முன்னின்று திருமணத்தினை நடத்தி வைத்தார். ஏனென்றால் அவர் தேவ பிள்ளையாக இருந்தார்.

பின்பு தேவன் என் திருமண வாழ்க்கையினை அற்புதமாக வழி நடத்தினார். அதன் மூலமாக இரண்டு பெண் பிள்ளைகளையும்

கொடுத்தார். என் சகோதரருக்கும் எனக்கும் ஆண் பிள்ளைகள் கிடையாது. ஆகையால் இரு வீட்டாரும் மன சஞ்சலத்தில் இருந்தனர். பின்பு family planning செய்வதாக இருந்தபோது இரு வீட்டாரும் தடையாக இருந்தனர். தேவன் மேல் பாரத்தை வைத்து என் மனைவி மூன்றாவதாகக் கர்ப்பம் தரித்தாள். prayer மட்டும் செய்தோம். வேறொன்றும் செய்யவில்லை. கர்ப்பத்தில் இருக்கும் போதே சாலமோன் என்று பெயரிட்டோம். அப்படியாகவே தேவன் மிக அழகான சாலமோன் என்ற ஆண் குழந்தையை எங்களுக்குக் கொடுத்தார்.

என் இரு பெண் பிள்ளைகளையும் மிக அறிவுள்ளவர்களாகவும், பண்புள்ளவர்களாகவும் தேவன் எனக்குத் தந்தார். தேவன் இரு பெண் பிள்ளைகளையும் இன்று வரைக்கும் கண் இமையைப் போல் காத்து வருகின்றார். என் மூத்த பெண் பிள்ளைக்கு மிக அதிகமான பிரேயர் செய்தார்கள். என் இரண்டாவது பிள்ளை மிக வருத்தத்தினால் ICU வில் இருந்தாள். அவளுக்கும் அதிக ஜெபம் நடந்தது. அதன் பலன் இன்று வரைக்கும் நல்ல ஆரோக்கியமும் நல்ல குணாதிசயங்களையும் உடையவர்களாக இருக்கின்றனர்.

தேவன் என்னையும் ஒரு கட்டிடமாக வைத்திருப்பதற்காக நன்றி. தேவன் நான் எங்கு சென்றாலும் அவருக்குள்ளாக நான் வந்த பிறகு நான் செல்லும் இடத்திலெல்லாம் எனக்கு தேவ பிள்ளைகளைக் காண்பித்து என்னை வழிநடத்திச் செல்கின்றார்.

கர்த்தரின் கிருபை உங்கள் அனைவரோடும் இருப்பதாக.

கிறிஸ்துவுக்குள்
அன்புள்ள உங்கள் சகோதரன்
V. ஜோதிலிங்கம்

பாலைவனமாய் இருந்த அந்தோணி ராஜேஷின் வாழ்வை சோலைவனமாக மாற்றிய இயேசு

நம்முடைய பிதாவாகிய தேவனுக்குள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு சதா காலங்களிலும் மகிமை உண்டாவதாக...

என் பெயர் எஸ். அந்தோணி ராஜேஷ். நான் ஒரு பாரம்பரிய (Roman Catholic) கிறிஸ்துவக் குடும்பத்தைச் சேர்ந்தவன். வாரந்தோறும் தேவாலயத்திற்குச் செல்வேன். ஆலயத்தில் நடக்கிற எல்லா நிகழ்ச்சிகளிலும், ஐக்கியங் களிலும் பங்கு பெறுவேன். சிறு வயதிலிருந்தே குடும்ப ஜெபம் (ஜெபமாலை ஜெபம் மட்டும் செய்யப்படும்) நடக்கும். என் தாயாரும் தகப்பனும் கட்டாயமாக நடத்துவார்கள். பாரம்பரியமான பக்தியில் பெற்றோர்கள் என்னை நடத்தினார்கள். அனைவருக்கும் பார்ப்பதற்கு ஒரு நல்ல கிறிஸ்தவ பையன் நான். அத்தனையும் நடிப்பு. அத்தனை கெட்ட, அசிங்கமான காரியங்களும், எண்ணங்களும் எனக்குள் இருந்தது. பெயரில்தான் நான் கிறிஸ்தவனே. தவிர உண்மையில் கிறிஸ்துவுக்கும் எனக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை.

பள்ளிப் பருவத்திலேயே தவறான நண்பர்களின் நட்பு, அத்தனை நண்பர்களும் பாரம்பரிய கிறிஸ்துவ சபையைச் சேர்ந்தவர்கள்தான். எல்லா முரட்டு குணங்களும், தீய எண்ணங்களும், பொய், பித்தலாட்டமும், திருட்டுத்தனமும் என்

வாழ்க்கையில் ஆழமாய் வேர் விட்டுக் கொண்டிருந்தது. சிறு வயதில் ஏழ்மையில் இருந்தாலும், பெற்றோரின் கடினமான உழைப்பால் எங்களை எக்குறையுமின்றி அவர்கள் பார்த்துக் கொண்டார்கள். இருந்தும் என்ன பிரயோஜனம்? பாவத்திற்கு அடிமையான வாழ்க்கைதானே. சிலர் எங்கள் வீட்டு பகுதியிலேயே சுவிசேஷம் அறிவிக்க வருவார்கள். அவர்கள் பாடுவது, வசனம் பேசுவது, ஜெபிப்பது எல்லாம் பாரம்பரிய சபையை விட வித்தியாசமாக இருக்கும். கலந்து கொள்ள வாஞ்சையிருந்தாலும், என் பெற்றோரும், உறவினர்களும் அவர்களோடு வாக்குவாதம் செய்து அவர்களை வெட்கப்படுத்தி அனுப்புவதைப் பார்த்திருக்கிறேன்.

அதே குணம் தான் எனக்குள்ளும் பதிந்து விட்டது. வீட்டிலே பெற்றோர்களும் உறவினர்களும் அவர்கள் மிஷனரிமார்கள், அவர்கள் நடத்துகிற கூட்டங்களுக்கெல்லாம் போகக் கூடாது. நாம் தான் உண்மையான சபையைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள் என்று கூறி விட்டார்கள். எனக்கு உண்மையான பக்தி இல்லாவிட்டாலும், தேவாலயத்தில் எல்லா நிகழ்ச்சிகளிலும் பங்கு பெற்று சில பொறுப்புகளையும் வகிப்பேன். இதை யெல்லாம் பார்த்த பங்கு குருவும் மற்ற சில முதியவர்களும் என்னைப் பாதிரியாராக்க முயற்சி செய்தார்கள்.

தேவ சித்தத்தையும் திட்டத்தையும் மீறி மனுஷன் என்ன செய்ய முடியும்? இப்படி நடிப்பும், நாடகமும், பாவங்களுடனும் வாழ்ந்து கொண்டிருந்த எனக்கு தேவன் கிருபையாக 10ம் வகுப்பு முடிந்து +1 படிக்கும்படி உதவி செய்தார். ஆனால் வாழ்க்கை மாறினபாடில்லை. அதே பாவச் செயல்கள் இன்னும் அதிகமாகத் தொடர்ந்தன. எப்படியாவது +1 பாசாகி +2 போய் விடுவோம் என்கிற ஒரு நம்பிக்கை இருந்தது. ஆனால் +1 முடிவில் Notice Board டை பார்த்தால் Fail List ல் என்னுடைய பெயர் இருந்தது. எனக்கு வாழ்க்கையே இருளாய் ஆனது போல் தோன்றியது. ஒரு விதமான பயம், திகில் என்னைப் பற்றிக் கொண்டது.

குடும்பத்திலே, உறவினர்கள் மத்தியிலே ஒரே அவமானம் ஏற்படுமே என்கின்ற யோசனைகள், எத்தனையோ உயர் படிப்புகளும், பட்டப் படிப்புகளும் படித்தவர்களே இந்த நவீன

விஞ்ஞான உலகத்தில் வாழவே கஷ்டப்படும் போது நான் எம்மாத்திரம்? என்னால் வாழ முடியாது. என் எதிர்காலமே இருண்டு போனதே. இனி வாழ்வதைக் காட்டிலும் சாவதே மேல் என்கிற எண்ணங்கள் இன்னும் பல விதமான கேள்விகள் என் உள்ளத்தில் உதித்துக் கொண்டே இருந்தது. எல்லாவற்றையும் ஆலோசனை செய்து ஆராய்ந்து பார்த்ததில் என்னுடைய தவறுகள், பாவங்களினால்தான் இந்த நிலைமை ஏற்பட்டது என்பதைத் தெளிவாகப் புரிந்து கொண்டேன். ஒரு நாளைக் குறித்து வைத்து ஒரு தீர்மானம் செய்தேன். அன்றைக்கு மரித்து விடலாம் என்று.

எனக்கு ஒரு நண்பர் இருந்தார். இவருடைய தகப்பனாரின் முயற்சியால் ஒரு சிறிய ஆலயம் கட்டப்பட்டு அதிலே பல ஆண்டுகளாக பாரம்பரிய ஜெபங்கள் நடத்தப்பட்டு வந்தன. ஆனால் சில மாதங்களாய் பாரம்பரிய சபையிலிருந்து இரட்சிக்கப்பட்ட சில சகோதரர்கள் அங்கு வந்து தேவ கிருபையால் பெரும் முயற்சியோடு ஆவிக்குரிய ரீதியில் வேத சத்தியத்தின்படி ஜெபக் கூட்டத்தைத் தொடங்கி இருக்கிறார்கள். இந்த சிற்றாலயத்தில் ஜெபக் கூட்டம் நடத்தப்படுவதைப் பற்றி அறிந்த நண்பர் எனக்கு கூறி என்னையும் கலந்து கொள்ளுமாறு மிகுந்த அன்போடு பல முறை அழைத்தார். அவர் அழைத்த நாட்களில் எனக்கு எங்கே நேரம் இருந்தது. நண்பர்களுடன் உலக பாவக் காரியங்களிலே நான் மூழ்கி இருந்தேன்.

சாக வேண்டும் என்கிற அந்த குறிப்பிட்ட நாள் வந்தவுடன் சைக்கிளில் சில இடங்களைச் சுற்றி விட்டு அந்த மாலை பொழுதில் வீட்டிற்கு ஒரு முக்கிய தெருவின் வழியாக சென்று கொண்டிருந்தேன். திடீரென்று என் கண்களில் அந்த சிற்றாலயம் தென்பட்டது. மின்சார விளக்குகள் ஜொலித்துக் கொண்டிருந்தன.

அந்த நாள் தேவன் என் வாழ்க்கையில் வைத்திருந்த திருப்புமுனை நாள் என்று எனக்குத் தெரியாது. என் உள்ளத்தில் ஒரு எண்ணம் தோன்றியது. அந்த நண்பர் பலமுறை என்னை அழைத்திருக்கிறாரே, ஏன் நான் ஒரு முறை அங்கு சென்று வரக் கூடாது, வாழ்க்கையே முடியப் போகிறது. ஒரு முறை சென்றுதான் பார்த்து விடலாமே என்று சைக்கிளை வெளியில் நிறுத்தி விட்டு

அந்த சிற்றாலயத்திற்குள் நுழைந்தேன். ஒரு சிறிய கூட்ட ஜனங்கள்தான் இருந்தது. ஆனால் அந்த சிற்றாலயத்தில் மின்சார விளக்குகளைக் காட்டிலும் ஒரு வித்தியாசமான அதிக பிரகாசம் அங்கு பிரகாசித்துக் கொண்டிருந்தது.

சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை கரங்களை உயர்த்தி தேவனை துதிக்கிறார்கள். அப்பா பிதாவே என்று அழைக்கிறார்கள். எனக்கு ஒரே ஆச்சரியமாக இருந்தது. நானும் இத்தனை ஆண்டுகளாக கிறிஸ்தவனாக இருக்கிறேன். ஒரு போதும் இப்படி தேவனை நான் துதித்ததில்லையே என்கிற உணர்வு. அப்படியே ஒரு மூலையில் சென்று அமர்ந்து கொண்டேன். ஆராதனை முடிந்தது.

ஒரு சகோதரன் சத்திய வேதத்தை திறந்து வசனங்களை போதிக்க ஆரம்பித்தார். அன்றைய செய்தியின் முதல் வசனம் I பேதுரு 5:6ம் வசனத்திலிருந்து தொடங்கப்பட்டது. **'ஆகையால் ஏற்ற காலத்தில் தேவன் உங்களை உயர்த்தும் படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்.'** இந்த வசனத்தைக் கேட்டவுடனே, அது ஒரு அம்பு போல என் இருதயத்தை தைத்தது. இப்படிப்பட்ட ஒரு வார்த்தையை நான் இதுவரை கேட்டதில்லை. எனக்குள் இருந்த அனைத்துக் கேள்விகளுக்கும் இந்த வசனம் பதில் கொடுத்தது.

அது என்னவென்றால் நான் தேவனுடைய கரத்தில் அடங்கி இல்லை என்பதுதான். தொடர்ந்து அந்த சகோதரன் வழியாக தேவன் சத்தியங்களை பேசப் பேச எனக்குள் இருந்த இருள், மரிக்க வேண்டும் என்கிற எண்ணம் எல்லாம் மறைந்து தேவனுடைய அன்பு என் உள்ளத்தில் நிரம்ப ஆரம்பித்தது. இன்னும் இப்படி தேவனுடைய சத்தியங்களை கேட்க வேண்டும் என்கிற ஆசை உண்டானது. அன்றைய தினத்திலிருந்து ஜெபக் கூட்டம் நடைபெறுகிற நாளை ஒரு போதும் தவற விடாமல் கலந்து கொள்ள ஆரம்பித்தேன்.

எனக்கு சில பாரம்பரிய ஜெபத்தைத் தவிர ஜெபிக்கத் தெரியாது. தேவ பிள்ளைகள் ஜெபக் கூட்டத்திலே ஜெபிக்கக் கற்றுக் கொடுத்தார்கள். தேவனை துதிக்க கற்றுக் கொடுத்தார்கள். எனக்கென்று வேத புத்தகம் இல்லாதிருந்தது. எனக்கு ஒரு வேத

புத்தகத்தை வாங்கிக் கொடுத்தார்கள். இதைத் தொடர்ந்து தேவன் என்னுடைய வாழ்க்கையில் கிரியை செய்ய ஆரம்பித்தார். குடும்ப வாழ்க்கையிலே தேவன் மாற்றங்களைக் கொண்டு வந்தார். உண்மையை, உத்தமத்தைக் கற்றுக் கொள்ள தேவன் உதவி செய்தார். பாலைவனமாக இருந்த என் வாழ்க்கையை தேவன் சோலைவனமாக மாற்றினார். என் வேலை முடிந்தவுடன் மாலை முழுவதும் ஜெபக்கூட்டம். ஆவிக்குரிய நண்பர்களுடன் சத்தியங்களைக் குறித்த விவாதம், ஆராய்ச்சி இப்படியே நாட்களைக் கழித்துக் கொண்டிருந்தேன். வீட்டிலும் உறவினர்கள் மத்தியிலும் என்னுடைய மாறுதல்கள் தெரிய வந்தன.

என்ன புதிதாய் வேதத்தை (பைபிளை) எடுத்துக் கொண்டு, ஜெபக் கூட்டம், ஜெபக்கூட்டம் என்று சென்று கொண்டிருக்கிறானே, ஆனாலும் பெற்றோருக்கு ஒரு மகிழ்ச்சி, ஜெபக் கூட்டங்களுக்கு தானே போகிறான், வாழ்க்கையும் முன்பை விட இப்போது நன்றாக வாழ்ந்து கொண்டிருக்கிறான் என்கிற திருப்தியில் இருந்தனர். இப்படியே சில ஆண்டுகள் கழிந்தது.

குடும்பத்திலும் உறவினர்கள் மத்தியிலும் அடிக்கடி என்னைப் பார்த்து ஒரு கேள்வியை கேட்டனர். ஜெபம், ஜெபக் கூட்டம் என்று நீ போய்க் கொண்டிருந்தால், வாழ்க்கையில் நீ முன்னேறவோ, உருப்படவோ முடியாது. ஒரு நல்ல வேலையும், கை நிறைய சம்பளமும் பெற வேண்டும். குடும்பத்தை உயர்த்தணும். அதுக்கெல்லாம் நீ இப்படி ஜெபக் கூட்டம், ஜெபக் கூட்டம் என்று சென்று கொண்டிருக்க முடியாது. உருப்படியாக ஏதாவது ஒரு வேலையைத் தேடிக் கொள் என்று கூறி வந்தார்கள். இந்தக் காரியம் என்னை சோர்வடையச் செய்தது.

நான் தனிமையில் தேவனோடு ஜெபிக்க ஆரம்பித்தேன். தேவனே எனக்கு ஒரு நல்ல வேலையையும் போதுமான சம்பளத்தையும் தாரும். நான் இதே போல பகல் நேரங்களில் வேலை செய்து மாலை நேரத்தில் ஜெபக் கூட்டங்களில் கலந்து கொண்டும், உம்முடைய நாமத்தை மகிமைப்படுத்தணும் என்று ஜெபித்தேன். என்னுடைய உறவினர்கள் குடும்பங்களில் அநேகர் இராணுவத்தில் பணிபுரிந்து வந்தனர். என் தகப்பனார் அதிகம்

படிக்காததினால் அவரால் இராணுவத்தில் சேர முடியவில்லை. எனவே எப்படியாவது என்னை இராணுவத்தில் சேர்க்க வேண்டும் என்கிற வாஞ்சை இருந்தது.

எனக்கும் சிறு வயதிலிருந்து அப்படி ஒரு ஆசை இருந்தது. என்றைக்கு தேவன் தம் பக்கமாய் என்னை இழுத்துக் கொண்டாரோ அப்போதிலிருந்து இந்த ஆசை என்னை விட்டு போய்விட்டது. ஆனால் என் தகப்பனாரோ என்னை இராணுவத்தில் சேர்க்க வேண்டும் என்கிற விடாமுயற்சியைத் தொடர்ந்துக் கொண்டே இருந்தார்.

அதன் விளைவாக பெங்களூர் பட்டணத்தில் உள்ள ஒரு இராணுவப் பயிற்சி முகாமில் இராணுவத்திற்கு ஆள் சேர்ப்பு நடந்த தினத்தில் என்னையும் அழைத்துச் சென்றனர். நானும் ஜெபத்தோடு கூட தேவனுடைய சித்தம், திட்டம் நிறைவேற வேண்டும் என்று சென்றேன். முதல் பரிசோதனையாக ஓட்டம் விடப்பட்டது.

கிட்டத்தட்ட 50க்கும் மேற்பட்டோர் ஓடினோம். என்னை விட சரீரத்தில் அதிக பலசாலிகளாக இருந்த அநேகர் அந்த ஓட்டத்தில் தோற்றுப் போனார்கள். தேவ பெலத்தால் நான் அதிலே தேர்ச்சி பெற்றேன். அதன் பிறகு சரீர பரிசோதனை நடத்தப்பட்டது. தேவ கிருபையினால் அதிலும் தேர்ச்சி பெற்றேன். சில தினங்களுக்கு பிறகு படிப்பிற்கு சம்பந்தப்பட்ட எழுத்துப் பரீட்சை நடைபெற்றது. அதிலும் பங்கு பெற்று விட்டு வீடு திரும்பி விட்டேன்.

சில நாட்களுக்குப் பிறகு என் வீட்டு விலாசத்திற்கு இராணுவ அலுவலகத்திலிருந்து ஒரு கடிதம் வந்தது. அதிலே ஒரு குறிப்பிட்ட தேதியிலே இராணுவத்தில் சேர்ந்து பயிற்சி பெற வரவேண்டும் என்று எழுதியிருந்தது. இந்த செய்தியை ஜெபக் கூட்டம் நடக்கிற நாளிலே சகோதரர்களோடு பகிர்ந்து கொண்டேன். அவர்கள் கூறினார்கள், 'தேவன் உங்களோடு இருப்பார், தைரியமாய் போங்கள், ஆனால் ஒன்று நீங்கள் எங்கிருந்தாலும் எதைச் செய்தாலும் தேவனுக்கு முன்பாக உண்மையாகவும், உத்தமமுமாய் வாழ வேண்டும்' என்றார்கள். அதன் பிறகு இராணுவத்தில் சேர்ந்தேன். இராணுவம் எனக்கு ஒரு

புது உலகமாக இருந்தது. கடினமான இராணுவ பயிற்சி நடைபெற்றது. இதன் மத்தியிலும் தேவன் இராணுவத்தில் இருக்கிற ஒரு சிற்றாலயத்தில் நடைபெறுகிற ஆவிக்குரிய ஆராதனையில் கலந்துக் கொள்ள உதவி செய்தார்.

இராணுவத்தில் பணிபுரிந்து, ஓய்வு பெற்று போதகர்களாக மாறினவர்கள், அங்கு் மிகுந்த வாஞ்சையோடு ஊழியம் செய்து வருகிறார்கள். பயிற்சியின் மத்தியிலே பல தோல்விகள், சோர்வுகள் ஏற்பட்டன. ஆனாலும் ஒரு நாளும் வேதத்தைப் வாசிப்பதிலும், ஜெபிப்பதிலும் தவறாமல் இருக்க தேவன் உதவி செய்து வந்தார்.

ஒவ்வொரு தோல்வி நேரத்திலும், சோர்வு ஏற்படும் சமயங்களிலும் ஊக்கமாகச் ஜெபிப்பேன். தொடக்கத்தில் தோல்வியாய் இருந்த எல்லா பயிற்சியிலும், முடிவிலே தேவன் பெரிய வெற்றிகளைக் கொடுத்தார். என்னோடு பயிற்சி செய்கிறவர்களுக்கு ஒரே ஆச்சரியம். என்ன இது தொடக்கத்தில் எல்லாவற்றிலும் தோல்வியில் இருந்த இவன் கடைசியில் எல்லாவற்றிலும் வெற்றி பெற்று விட்டானே. இது எப்படி என்று என்னிடத்தில் கேட்பார்கள்.

நான் சொன்னேன், 'என் தேவனிடத்தில் ஜெபித்தேன். தேவன் எனக்கு பெலத்தைக் கொடுத்தார், வெற்றி பெறச் செய்தார்' என்றேன். என்னுடைய ஒவ்வொரு காரியங்களும் வித்தியாசமாக இருக்கவே நான் அழைக்காமலே பலர் என்னோடு இராணுவத்தில் நடக்கிற ஆராதனையில் கலந்துகொள்ள வருவார்கள்.

இந்த என்னுடைய இரண்டு வருட பயிற்சி நாட்களில் அநேக இராணுவ பிள்ளைகளுக்கு (வீரர்களுக்கு) ஜெபிக்கவும், தேவனுடைய சத்தியங்களை பகிர்ந்துக் கொள்ளவும் எனக்கு தேவன் கிருபை செய்தார். எனது இரண்டு வருட பயிற்சிக்குப் பிறகு மத்தியப் பிரதேசத்திற்கு பணிக்குச் சென்றேன். அங்கு சென்ற பிறகு தோல்வியுற்று இருந்த என் கல்வியைத் தொடர தேவன் உதவி செய்து தேர்ச்சி பெற செய்தார். இந்த இடத்தில் இருந்த இராணுவ சிற்றாலயத்தில் தேவனுடைய ஆராதனையை நடத்த தேவன் வாசலைத் திறந்து கொடுத்தார். இன்றைக்கு

என்னுடைய இராணுவ வாழ்க்கையில் 13 ஆண்டுகளைக் கடந்து சென்று கொண்டிருக்கிறேன். தேவன் என்னை ஒரு ஊழியக் காரனைப் போல இராணுவத்தில் வைத்து நடத்திக் கொண்டு வருகிறார்.

இராணுவ பணிகளிலும் தேவன் தம்முடைய ஞானத்தையும், பெலத்தையும் கொடுத்து ஒவ்வொரு காரியத்தையும் நேர்த்தியாய் செய்து முடிக்க உதவி செய்து கொண்டு வருகிறார். என்னுடைய குடும்பத்திற்காக பாரத்தோடு ஜெபித்துக் கொண்டு வந்த எனக்கு தேவன் கிருபையால் என் அண்ணனை இரட்சித்து, இன்று முழுநேர ஊழியக்காரனாக கர்நாடக மாநிலத்தில் பயன்படுத்தி வருகிறார். சில ஆண்டுகளுக்கு முன்பு தேவன் வாலிபர்களைக் குறித்த ஒரு பாரத்தை என் உள்ளத்தில் வைத்தார். அதற்காக ஜெபித்த பொழுது "இளைஞனை அழைக்கும் இறைவனே" என்கிற ஒரு புத்தகத்தை எழுதி வெளியிட தேவன் ஞானத்தையும், பெலத்தையும் தந்து உதவி செய்தார்.

சில ஆண்டுகளுக்கு முன்பு ஒரு சிறப்பு இராணுவ பயிற்சியிலே இரண்டு மாதம் என்னை புனேயில் உள்ள இராணுவக் கல்லூரிக்கு அனுப்பி வைத்தார்கள். அந்த நாட்களில் நான் எதிர்பாராத விதமாக, ஆனால் தேவனுடைய முன் குறித்தலின்படி சகோதரர் குமாரசாமியை சந்திக்க நேர்ந்தது. அவர் அந்தக் கல்லூரியில் இரண்டு வருட கட்டிடக் கலை படிப்பைப் படித்துக் கொண்டிருந்தார்.

அவர் சொன்னார் எனக்கும் பயிற்சி முடிய சில நாட்களே உள்ளது. இந்த பயிற்சியை முடித்த பிறகு நான் பெங்களூரில் பணிக்குச் செல்ல இருக்கிறேன் என்றார். சில தேவ பிள்ளைகளின் தொலைபேசி எண்களை அவருக்குக் கொடுத்து பெங்களூர் சென்ற பிறகு இவர்களை சந்தியுங்கள் என்று சொன்னேன். அவரும் பெங்களூர் வந்த பிறகு தேவ பிள்ளைகளோடு ஐக்கியத்தை ஏற்படுத்திக் கொண்டார்.

அதன் பிறகு நான் விடுமுறையில் பெங்களூர் வந்த போது அவரைச் சந்தித்தேன். சகோ. குமாரசாமி மூலமாக அவரின் தம்பி ஜோதிலிங்கமும், சகோ. செல்லமுத்துவும் அறிமுகமானார்கள்.

ஒருநாள் எங்களுக்கு ஒரு யோசனை வந்தது. நாம் நான்கு பேருமே ஒன்று சேர்ந்து ஏன் தேவனுக்காக ஏதாவது செய்யக் கூடாது என்று. அதன் விளைவாக 3 நாள் உபவாசக் கூட்டம் பெங்களூர் பட்டணத்தில் முதல் முறையாக நடத்தத் தீர்மானித்து ஜெபித்தோம். நடத்தும்படி தேவன் உதவி செய்தார்.

அப்போது இந்த ஊழியத்திற்கு என்ன பெயர் வைக்க வேண்டும் என்று ஜெபித்துக் கொண்டிருந்தபோதுதான் தேவன் இராணுவ சகோதரர்கள் ஐக்கியம் **(Army Brothers Fellowship)** என்கிற பெயரைக் கொடுத்தார். அந்த முதல் மூன்று நாட்கள் உபவாசக் கூட்டம் முடிந்த பிறகு எங்கள் சபை போதகரோடு பேசிக் கொண்டிருந்தபோது தான் மற்றொரு யோசனையை தேவன் எங்களுக்கும், எங்கள் சபை போதகருக்கும் கொடுத்தார்.

ஏன் இப்படிப்பட்ட மூன்று நாட்கள் உபவாசக் கூட்டங்களை கர்நாடகா மாநிலத்தில் உள்ள 30 மாவட்டங்களிலும் நடத்தக் கூடாது என்று. அதன்படி ஒரு வருடத்திற்கு இரண்டு மாவட்டங்களை சந்திக்க வேண்டும் என்று சொல்லி ஜெபித்துக் கூட்டங்களை சபை போதகரின் உதவியோடும், ஆலோசனையோடும் நடத்தி வருகிறோம்.

15 ஆண்டுகளுக்கு முன்பு என்னை அழைத்த தேவன் இதுவரை கரம் பிடித்து நடத்தி வருகிறார். இனிமேலும் நடத்துவார். பிர 12:1 கூறுவது போல **'வாலிப பிராயத்தில் உன் சிருஷ்டிகரை நினை'** என்று சொன்ன தேவன் சங். 119:9ல் **'வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம் பண்ணுவான்? உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக் கொள்ளுவதினால்தானே'** என்று சொல்லி இருக்கிறார்.

எனக்கு அன்பான சகோதர, சகோதரிகளே, வாலிப நாட்களிலே நம்முடைய வாழ்வை தேவனுக்கு அர்ப்பணித்து நாம் முன் செல்லுவோம். உலகத்தை கலக்கின எல்லா தேவனுடைய மனிதர்களையும் பார்த்தால் அவர்கள் எல்லாரும் வாலிப நாட்களில் தங்கள் வாழ்வை தேவனுக்கு அர்ப்பணித்த வர்கள்தான். வாலிப நாட்களில் நாம் எடுக்கும் முடிவு தான் நம்மை முதிர் வயது வரைக்கும் நிலைத்து நிற்கச் செய்யும். ஆனால் அந்த

முடிவு தேவன் பக்கமா அல்லது உலகத்தின் பக்கமா என்று சிந்தித்துப் பார்ப்போம்.

நிச்சயம் தேவன் இந்த புத்தகத்தின் வழியாக உங்களோடு பேசுவார். விக்கிரக ஆராதனைக்கும் பாவங்களுக்கும் அடிமைகளாகி இருக்கிற நம் தேசத்தின் தேச ஜனங்களை தேவன் பக்கமாய் திருப்ப உங்களையும் ஒரு உபயோகமுள்ள கருவியாக எடுத்துப் பயன்படுத்துவார். ஏற்ற காலத்திலே உயர்த்துவேன் என்று வாக்குக் கொடுத்த தேவன் உங்களை பலவான் கையிலுள்ள அம்புகளாய் மாற்றுவாராக. அழிந்து கொண்டிருக்கிற ஒரு தலைமுறையை தேவன் பக்கமாய் திருப்புகிற உன்னதமான பணியில் இன்றே உங்களை ஒப்புக் கொடுத்து இணைவீர்களாக...

இப்படிக்கு உங்கள் அன்பு சகோதரன்

எஸ். அந்தோணி ராஜேஷ்

நமது நாட்டிற்காக கண்ணீர் சிந்திய கனடா நாட்டு மிஷனெரி

பாஸ்டர் என்.ஆர். டேவிட்

ஒரு பாரம்பரிய இந்துக் குடும்பத்தில் பிறந்தவர்

கல்வாரி ஜெப ஐக்கியக் குழுவின் தலைவராகவும், 'லிவிங் பிரட் மினிஸ்ட் ரீஸின்' போதகராகவும் இருக்கின்ற சுப்பிரமணியன் என்ற பெயர் கொண்ட பாஸ்டர் N.R. டேவிட் அவர்கள் ஒரு பரம்பரைக் கிறிஸ்தவர் அல்ல. அவரும் அவருடைய தாய், தகப்பன் அனைவருமே ஒரு பாரம்பரிய இந்துக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்தான். மிகுந்த பக்தியோடு, இந்துமத கலாச்சாரங் களையும் சம்பிரதாயங்களையும் அனுஷ்டானங்களையும் பூஜை புனஸ்காரங்களையும் சிறுவயது முதலே போதித்து, ஆண்டு தோறும் முருகனுக்குப் பால் காவடியும் எடுக்க வைத்தவர்தான் இவர் தந்தை. இவரது தந்தை ஒரு ஜோதிட நிபுணர்கூட.

குடும்பங்களில் நடக்க வேண்டிய பல நல்ல காரியங்கள், திருமணம், நிச்சயதார்த்தம், சடங்கு, கிரஹப் பிரவேசம், காதுகுத்து, தெவசம், கருமாதி போன்று அனைத்து காரியங் களுக்கும் நேரம், காலம் பார்த்து நாள் குறித்துக் கொடுப்பவர். இவரிடம் ஜோஸ்யம் பார்க்கவும், நாள் குறித்து வாங்குவதற்கும் எப்போதும் ஒரு கூட்ட ஜனம் இவர் வீட்டில் காத்திருக்கும். அப்பேர்ப்பட்ட ஒரு பாரம்பரிய குடும்பத்தில் வளர்ந்தவர்தான் டேவிட் என்கிற சுப்பிரமணியன்.

சோதனை மேல் சோதனை - கும்பிட்ட தெய்வங்கள் எதுவும் காப்பாற்றவில்லை

சீர்காழியில் கல்வியை முடித்துவிட்டு பெங்களூரில் ஒரு கட்டிடம் கட்டும் கம்பெனியில் வேலைக்கு சேர்ந்தார். ஒரு சிறிய ரூமை வாடகைக்கு எடுத்து லிங்கராஜபுரத்தில் வசித்து வந்தார். திடீரென்று வாழ்க்கையில் சோதனை. திடீர் திடீர் என்று அடிக்கடி தாங்க முடியாத அளவுக்கு வயிற்று வலி வந்தது. முதலில் மெடிக்கல் ஷாப்பில் மாத்திரை, மருந்துகள் வாங்கி சாப்பிட்டார். குணமாகவில்லை. பின் பல டாக்டர்களைப் பார்த்தார். நிலைமை நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டே போனது. கடைசியில் ஸ்கேன் எடுத்துப் பார்த்ததில் வயிற்றில் மிக மோசமான நிலையில் பெப்டிக் அல்சர். அல்சரால் குடலில் பல பகுதிகள் பாதிக்கப்பட்டு இருப்பது தெரிந்தது. ஆபரேஷன் செய்ய வேண்டும் என்று டாக்டர்கள் கூறிவிட்டனர்.

செலவு அதிகம் ஆகும். ஆபரேஷன் செய்யப் பணம் எதுவும் இல்லை. அவருடைய குடும்பம் மிகவும் ஏழ்மை நிலையில் இருந்தது. என்ன செய்வது என்று தெரியவில்லை. நமக்கு ஏன் இந்த நிலை? நான் யாருக்கும் எந்தக் கெடுதலும் செய்ய வில்லையே. நமக்கு ஏன் இப்படி தீராத ஒரு வயிற்று வலி? என்னிடம் எந்தக் கெட்ட பழக்கமும் இல்லையே. நானும் என் குடும்பமும் ஆத்மார்த்தமாக கும்பிட்ட இந்த தெய்வங்கள் எல்லாம் ஏன் எனக்கு இந்த வயிற்று வலி வராமல் காக்கவில்லை? வருஷம் தோறும் நான் பால்காவடி எடுத்தேனே. எல்லா கோயில்களுக்கும் போனேனே. பூஜை புனஸ்காரங்களோடு பக்தியாய் வாழ்ந்தேனே. எனக்கு ஏன் இந்த நோய்? டேவிட் நொந்து போய் விட்டார். ஆனால் என்ன செய்வது என்றுதான் தெரியவில்லை.

டேவிட்டை முன்குறித்த தேவன் ஆபேலை அனுப்பினார்

இந்த நிலையில்தான் அவர் மருத்துவமனையில் தன் விதியை நொந்து, தாங்க முடியாத வயிற்று வலியினால் தற்கொலை செய்து கொள்ளலாமா என்று எண்ணிக் கொண்டு இருக்கிற நிலையில்

ஒரு நாள் ஆபேல் என்கிற ஒரு கிறிஸ்தவர் ஆஸ்பத்திரிக்கு வந்து இவரைச் சந்தித்தார். இயேசு கிறிஸ்துவைப் பற்றிக் கூறினார்.

இந்த வயிற்றுக்கு வலிக்கு காரணமே குடும்பத்தில் பரம்பரையாக செய்து வந்த விக்கிரஹ ஆராதனைதான் என்றும், அதனால் வந்த சாபத்தினாலும் தான் என்று ஆபேல் கூறினார். மேலும் அவர் ஒரு கேள்வியைக் கேட்டார். 'ஏன் பிரதர், இந்த உலகத்தையும், உங்களையும் படைச்சது யாரு?' என்றார். கடவுள் என்றேன். அவரைப் பார்த்திருக்கிறீர்களா? ஆம் பார்த்திருக் கிறேன். எங்கே? கோயில்களில். எந்தக் கோயிலிலில்? எல்லாக் கோயில்களிலும்தான். அங்கே இருப்பது சிலைகள்தானே? அந்த சிலைகளை செய்தது யாரு? மனிதர்கள்தானே? கடவுளுக்கு உருவமே கிடையாதே.

அவர் அரூபியாக இருக்கிறார் என்றுதானே உங்கள் வேதங்களே கூறுகிறது. உருவமே இல்லாத அவருக்கு ஒரு உருவத்தைப் படைத்து அதைக் கோயிலில் பிரதிஷ்டை செய்தால் அது நம்மைக் காக்குமா? இப்படிச் செய்வது நம்மை யெல்லாம் படைத்த அந்த சர்வேஷ்வரனை இழிவுபடுத்துவதாக, புறக்கணிப்பதாக ஆகாதா? அதனால்தான் குடும்பத்தில் சாபம் வருகிறது.

பாவங்கள், சாபங்களினால்தான் நோயும் கஷ்டங்களும்

இந்த சாபங்களினால்தான் உங்களுக்கு நோய், வேதனை எல்லாம். பாவம், சாபம் எல்லாவற்றையும் இயேசு கிறிஸ்துவின் இரத்தம் போக்கும். கவலைப்படாதீர்கள். முழு இருதயத்தோடு இயேசுவிடம் சரண் அடையுங்கள். அவர் உங்களுக்கு சுகம் கொடுப்பார் என்று கூறி ஜெபம் செய்தார்.

அவர் செல்லும் சர்ச்சுக்கு என்னை அழைத்துச் சென்றார். எல்லோரும் ஜெபம் செய்தனர். எனக்கு ஜெபிக்கத் தெரியவில்லை. ஆனால் ஆண்டவரிடம் மனம் விட்டுப் பேசினேன். என்னுடைய அல்சரை நீர் குணப்படுத்தவில்லை என்றாலும் பரவாயில்லை. என் பாவங்களை மன்னியும் என்று வேண்டினேன். பாவங்கள் நோயை விட மிகவும் ஆபத்தானது

என்று அப்போது உணர்ந்தேன். என் பாவங்களை நான் அறிக்கை செய்தபோது ஒரு மிகப் பெரிய விடுதலையை நான் என் உள்ளத்தில் உணர்ந்தேன். அடுத்த வாரமே ஞானஸ்நானம் எடுத்தேன். என் உடலில் பரிபூரண சுகமும் பெற்றேன்.

அவர் ஜெபம் செய்து முடிக்கின்ற சமயத்தில் யாரோ என் வயிற்றின் பகுதியைத் தொடுவது போல் ஒரு உணர்வு. அடுத்த வினாடி எனக்கு என் வயிற்று வலியிலிருந்து ஒரு பரிபூரண விடுதலை கிடைத்தது. வயிற்று வலி இருந்த இடம் தெரியவில்லை. அப்பா.. எவ்வளவு பெரிய விடுதலை அது... என் உள்ளத்தில் நான் இதுவரை அனுபவித்திராத ஒரு அமைதி, தெய்வீக அமைதி. ஒரு பெரிய பாரம் என்னை விட்டு நீங்கியது போன்ற ஒரு விடுதலை உணர்வு. அதை வார்த்தைகளினால் சொல்லி முடியாது. அனுபவித்து உணர்ந்தால்தான் புரியும். வாவ்! அப்படியே வானத்திற்கும் பூமிக்கும் ஊடே துள்ளிக் குதிக்க வேண்டும் என்ற ஒரு மகிழ்ச்சியின் துள்ளல் உள்ளத்தில்.

உலகம் கொடுக்கிற சமாதானமல்ல, என்னுடைய சமாதானத்தையே தருகிறேன்

எனக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து எத்தனையோ கோயில்களுக்குச் சென்றிருக்கிறேன். முழு இருதயத்தோடு, பய பக்தியோடு சாமி கும்பிட்டு இருக்கிறேன். விரதம் இருந்து காவடி எடுத்திருக்கிறேன். அப்போ எனக்குக் கிடைக்காத ஒரு தெய்வீக உணர்வு, விடுதலை, உள்ளத்தில் ஒரு நிறைவை இப்போது நான் உணர்கிறேன். உடனடியாக நான் கிறிஸ்துவை எனது சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு, பைபிள் படிக்க ஆரம்பித்தேன். சர்ச்சுக்கு செல்ல ஆரம்பித்தேன்.

1984ல் முழுகி ஞானஸ்நானமும் எடுத்தேன். ஆண்டவரின் ஊழியத்தையும் செய்ய ஆரம்பித்தேன். அங்கே முன்ன பின்ன தெரியாதவர்கள் என் மீது காட்டிய அன்பு, நட்பு, பாசம், அக்கறை என்னை திக்குமுக்காட வைத்தது. திருச்சபையில் போதகர் கொடுத்த செய்தி என்னைப் பண்படுத்துவதாக இருந்தது. என்னை நானே சோதித்துப் பார்க்கும்படியாக ஒரு கண்ணாடியாக இருந்தது.

கிறிஸ்தவம் என்னைப் பண்படுத்தியது

நான் இதுவரை நடந்து வந்த பாதையை நான் திரும்பிப் பார்த்தேன். பெரிய பாவங்கள் எதையும் நான் செய்துவிட வில்லைதான். ஆனால் என் உள்ளம் நிச்சயமாக 100 சதவிகிதம் பரிசுத்தமாக இல்லை என்பதை நான் உணர்ந்தேன். தேவன் அருவருக்கின்ற பல எண்ணங்கள், குணாதிசயங்கள், என் உள்ளத்தில் இருந்தது. வம்பு, வீம்பு, வைராக்கியம், கோபம், எரிச்சல், பழிவாங்குகிற நினைவுகள், வாலிப வயதுக்கேற்ப சில பாலியல் உணர்வுகள், சின்னச் சின்ன பொய் சொல்லுதல் போன்ற குணங்கள் என்னிடம் இருந்தன. இவைகள் எல்லாமே ஆண்டவரின் பார்வையில் பாவம், அவர் அருவருக்கின்றவைகள் என்பதை எனக்கு கிறிஸ்தவம் உணர்த்தியது. கிறிஸ்தவம் என்னைப் புடமிட்டது. பரிசுத்தப்படுத்தியது.

எதிர்பாராமல் எரிக்கை சந்தித்தேன்

இந்த சமயத்தில்தான் நான் ஒரு நாள் 1985ல் வழக்கம் போல் என் வேலை ஸ்தலம் இருந்த எம்.ஜி. ரோடுக்கு லிங்கராஜ புரத்திலிருந்து நடந்து போய்க் கொண்டு இருந்தேன். என்னுடைய ஆபீஸ் இன்னும் கொஞ்ச தூரமே இருக்கின்ற ஒரு நிலையில் ஒரு வெளிநாட்டுக்காரர் ரோட்டில் போவோர் வருவோரிடமெல்லாம் கைப்பிரதியொன்றை கொடுப்பதைப் பார்த்தேன். நான் அவரை கிராஸ் செய்யும்போது, சிரித்த முகத்துடன் அவர் என்னைப் பார்த்து, எனக்கும் ஒரு கைப்பிரதியைக் கொடுத்து 'தயவு செய்து இதைப் படியுங்கள்' என்றார். நான் அதை வாங்கிக் கொண்டேன். எனக்கு சற்று ஆச்சரியம்.

ஒரு வெளிநாட்டுக்காரர். அவர் ரோட்டில் நின்று கொண்டு போவோர் வருவோருக்கெல்லாம் கிறிஸ்துவைக் குறித்து கைப்பிரதியைக் கொடுத்துக் கொண்டு இருக்கிறார். நான் அவரைப் பற்றி இன்னும் தெரிந்து கொள்ளும் ஆர்வத்துடன் அவரைப் பற்றி விசாரித்தேன்.

சுவிசேஷத்தை அறிவிக்க அழைக்கப்பட்ட எரிக்

அவர் தன் பெயர் எரிக் கிரஹாம் கிரிஃபின் (Eric Graham Griffin) என்றும், அவர் கனடா நாட்டிலிருந்து வந்திருப்பதாகவும்,

ஒரு மிஷனெரியாக இங்கு பணியாற்றிக் கொண்டு இருப்பதாகவும் கூறினார். நான் என்னை அறிமுகப்படுத்தி அவரோடு பேசிக் கொண்டு இருக்கும்போது, அவருடைய கை, முகம் மற்றும் பாதம் போன்ற பல இடங்களில் கொசுக் கடியால் ஏற்பட்ட காயங்களைக் கண்டேன். எங்கே தங்கி இருக்கிறீர்கள் என்றேன். அவர் சிவாஜி நகரிலுள்ள குடிசைப் பகுதியில் உள்ள ஒரு முதியோர் மற்றும் அனாதைகள், ஆதரவற்றோர் இல்லத்தில் தங்கி இருப்பதாகக் கூறினார்.

அது சாக்கடை ஓடும், சுத்தம் சுகாதாரம் இல்லாத ஒரு குடிசைகள் நிறைந்த ஒரு பகுதி. அங்கே அவர் தங்கியிருக்கிறார் என்பதைக் கேட்டபோது எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. ஏன் அங்கு தங்கியிருக்கிறீர்கள்? ஏதாவது ஒரு ஹோட்டலில் அல்லது நல்ல ஏரியாவில் ஒரு வாடகை வீட்டில் இருக்கலாமே என்றேன்.

அதற்கு அவர் எனக்கு அவ்வளவு வசதிகள் எதுவும் கிடையாது என்றும், எந்த ஒரு ஸ்தாபனமும் அவரை சப்போர்ட் செய்யவில்லை என்றும், அவர் இந்தியாவுக்கு ஒரு ஒன்வே டிக்கெட்டோடு வந்தவர் என்றும் கூறினார். கர்த்தருக்கு சித்தமானால் என்றாவது ஒருநாள் நான் கனடா திரும்பிச் செல்வேன் என்றும், இல்லையேல் இங்கேயே ஆண்டவருக்கு ஊழியம் செய்வேன் என்றும் கூறினார்.

சாய்பாபா போன்றவர்களுக்கும் சுவிசேஷம்

அரசியல்வாதிகள், ரௌடிகள், சமூக விரோதிகள், திருடர்கள், மந்திரவாதிகள், ஜோதிடர்களுக்கும் மற்றும் மதம், தெய்வங்களின் பெயரால் ஜனங்களை ஏமாற்றிக் கொண்டு இருக்கிற புட்டபர்த்தி சாய்பாபா போன்றவர்களுக்கும்

சுவிசேஷத்தை அளிக்க ஆண்டவர் அவரை அழைத்திருக்கிறார் என்றார். சாய்பாபாவின் பெயரை அவர் சொன்னபோது எனக்கு ஒரே ஷாக். உலகம் முழுக்க சாய்பாபாவை ஒரு தெய்வப் பிறவியாக எண்ணி வழிபட்டு வருகின்றனர். உலகம் முழுக்க அவருக்கு பல லட்சம் பக்தர்கள் இருக்கின்றனர். அவருக்கு சுவிசேஷத்தை அறிவிக்க இவருக்கு அழைப்பா? எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

எரிக் என்னோட ரூம்மேட் ஆனார்...

நான் ஒரு சின்ன ரூமில் ஒரு கயிற்றுக் கட்டில், ஒரு டேபிள், ஒரு சேர் முதலிய அயிட்டங்களோடு இருக்கிறேன். உங்களுக்கு இஷ்டமிருந்தால் நீங்கள் அங்கே வந்து தங்கலாம். என்னுடைய கட்டிலை நீங்க யூஸ் பண்ணிக்கலாம். என்னோட இடத்தில் கொசு கிடையாது என்றேன். ரூம் வாடகையையும், அவரோட சாப்பாட்டு செலவையும் நான் பார்த்துப்பேன் என்றேன். அந்த சமயத்தில் அந்த ரூமுக்கு வாடகை ரூ.50 மட்டுமே. எரிக் சந்தோஷமாக நான் சொன்னதை ஏற்றுக் கொண்டார்.

என்னுடைய ரூம் விலாசத்தைக் கொடுத்து விட்டு நான் வேலைக்குச் சென்று விட்டேன். அடுத்த நாள் காலை 8 மணிக்கு, என்னோட அருகில் இருக்கிற ஒரு நண்பர், 'சைக்கிளில் தன் உடமையோடு இருக்கிற ஒரு உயரமான வெள்ளைக்காரர் உன்னைத் தேடிக் கொண்டு இருக்கிறார்' என்றார். நான் வெளியில் சென்று பார்த்தால் அது மிஸ்டர் எரிக். அவரைப் பார்த்ததில் எனக்கு மிகுந்த சந்தோஷம். அவரை கைகுலுக்கி வரவேற்று என்னுடைய சின்ன ரூமுக்கு அழைத்துச் சென்றேன்.

நான் ஒரு கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனியில் மாதச் சம்பம் ரூ.400ல் ஒரு ஆபீஸ் பாயாக வேலை செய்து வந்தேன். அந்த சம்பளத்தில் என்னோட ரூம் வாடகை, சாப்பாடு மற்ற இதர செலவுகள் போக என் பெற்றோர்களையும் நான் சப்போர்ட் பண்ண வேண்டிய ஒரு நிலையில் இருந்தேன். நான் தினமும் காலை எட்டு மணிக்கு என்னோட ஆபீஸுக்கு கிளம்பி விடுவேன்.

அதே சமயத்தில் கைப்பிரதிகளைக் கொடுப்பதற்கு எரிக்கும் வெளியே கிளம்பி விடுவார். ஸ்டிக்கர்கள், கிறிஸ்துவை

அறிவிக்கும் கைப்பிரதிகளை எடுத்துக் கொண்டு கிளம்புவார். ஸ்டிக்கர்களை குழந்தைகள், சிறுவர்களுக்குக் கொடுப்பார். அதனால் பிள்ளைகள் அவரை அன்பாக 'ஸ்டிக்கர் அங்கிள்' என்று அழைப்பார்கள். இரவு அவர் திரும்புவார். வந்து அன்று அவருடைய மினிஸ்ட்ரியின் அனுபவங்களைச் சொல்லுவார். அவருடைய வாழ்க்கையில் நான் பல அதிசயங்கள், அற்புதங்களைக் கண்டிருக்கிறேன். அதில் சிலவற்றை மாத்திரம் இங்கே கூறுகிறேன்.

உங்களுக்கு இன்னது தேவை என்று இயேசு அறிவார்

எரிக் அடிக்கடி உபவாசம் இருந்து ஜெபம் செய்வார். ஒரு தடவை அவர் ஏழு நாட்கள் உபவாசம் இருந்து ஜெபித்தார். ஏழு நாட்கள் உபவாசத்திற்குப் பிறகு அவருக்கு பயங்கரமான பசி எடுத்தது. ரூமில் ஏதாவது சாப்பாடு இருக்குமா என்று பார்த்தார். ஒன்றும் இல்லை. அவர் மண்ணெண்ணெய் ஸ்டவ்வை பற்ற வைத்து ஒரு பாத்திரத்தில் தண்ணீரை ஊற்றி அடுப்பில் வைத்து விட்டு, அந்த ஸ்டவ்வுக்கு முன்பாக முழங்கால் படியிட்டு ஒரு கப் அரிசிக்காக ஜெபம் செய்ய ஆரம்பித்தார்.

45 நிமிடங்கள் ஜெபம் செய்து விட்டார். அரிசி கிடைக்கவில்லை. மேலும் ஒரு 30 நிமிடம் ஜெபம் செய்தார். ஒன்றும் கிடைக்கவில்லை. ஸ்டவ்வில் மண்ணெண்ணெய் தீர்ந்து அதுவும் அணைந்து விட்டது. எரிக் ஸ்டவ்வை ஒரு பக்கம் தள்ளி வைத்து விட்டு பைபிள் படிக்க ஆரம்பித்து விட்டார். அவர் பைபிள் படித்துக் கொண்டு இருக்கும்போது யாரோ கதவைத் தட்டும் சப்தம் கேட்டது. இவர் போய் கதவைத் திறந்தார். பக்கத்து வீட்டு சிஸ்டர் ருக்மணி கையில் ஒரு பெரிய பாத்திரத்தோடு வாசலில் நின்று கொண்டு இருந்தார்.

கண்ணின் மணியைப் போல காக்கும் கர்த்தர்

பாத்திரம் முழுக்க பிரியாணி, பழம், ஸ்வீட்டு, ஐஸ்கிரீம். அவள் பாத்திரத்தை அவரிடம் கொடுத்து விட்டு, 'என்னவோ தெரியவில்லை. எனக்கு உங்களுக்கு இப்போ சாப்பாடு கொடுக்கணும்னு ஒரு அடக்க முடியாத ஒரு உந்துதல். அதுதான்

சமைத்து எடுத்து வந்தேன்' என்றாள். எரிக் அவளுக்கு நன்றி கூறி, கதவைச் சாத்தி விட்டு, முழங்கால் படியிட்டு ஆண்டவருக்கு நன்றி கூறி ஜெபம் செய்தார். 'ஆண்டவரே, என்னை போஷிப்பது எப்படி என்று உமக்குத் தெரியும். என் தேவைகளை எல்லாம் நீர் பூர்த்தி செய்வீர். ஆனால் என் தேவைகளுக்கு எப்படி ஜெபிப்பது என்று தான் எனக்குத் தெரியவில்லை. எரிக் வெறும் ஒரு கப் அரிசிக்கு மட்டும் ஜெபித்தார். வெறும் சாதத்தை வடித்து எப்படி சாப்பிட? அதுதான் ஆண்டவர் அவரோட ஜெபத்துக்குப் பதில் தராமல், ஃபுல் சாப்பாடே, பிரியாணி, பழம், ஸ்வீட், ஐஸ்கிரீமோடு ஒரு விருந்தையே தயார் செய்து அனுப்பி விட்டார். ஆண்டவரின் அன்புக்கு ஈடு இணையே கிடையாதே!

கர்த்தருக்குள் ஒருவன் புதிய சிருஷ்டியாகிறான்

ஒருநாள் இரவு, மணி 12 இருக்கும். ஒரு வயதான ஆங்கிலோ - இந்தியன் லேடி உடம்பெல்லாம் ரத்தக் காயத்துடன் நடுங்கிக் கொண்டே வந்து கதவைத் தட்டினார். அவர் தலையில் இருந்து ரத்தம் வடிந்து கொண்டு இருந்தது. என்ன ஆச்சு? இந்த காயம் எப்படி ஏற்பட்டது? நான் ஏதாவது உங்களுக்கு ஹெல்ப் பண்ணணுமா? என்று எரிக் கேட்டார். அந்த லேடி எரிக்கை 'என்னோடு நீங்கள் வீட்டுக்கு வர முடியுமா? வந்து என்னுடைய குடிகார மகனுக்காக ஜெபம் செய்ய முடியுமா? குடித்து விட்டு என் மகன் வீட்டில் அட்டகாசம் செய்து கொண்டு இருக்கிறான்' என்றார். எரிக் ஒரு சில நிமிடங்கள் வெயிட் பண்ணுங்கள் என்று கூறிவிட்டு முழங்கால் படியிட்டு ஜெபம் செய்தார். பின்பு டிரஸ் செய்து கொண்டு அந்த லேடியோடு சென்றார்.

அடுத்த நாள் காலையில் எரிக் முதல் நாள் இரவு அங்கே என்ன நடந்தது என்று கூறினார். அந்த லேடியோடு அவர் வீட்டுக்குப் போனவுடன் கதவைத் தட்டினார். கோப வெறியில் இருந்த அந்த லேடியின் மகன் கதவைத் திறந்தான். எரிக்கைப் பார்த்தவுடன் ஒரு இரும்பு நாற்காலியை எடுத்து எரிக்கை தாக்க வந்தான். எரிக் ஆண்டவரிடம் வேண்டிக் கொண்டே அந்த ரத்த வெறி பிடித்த அவனுக்குள் இருந்த அந்த அசுத்த ஆவியை அதட்டிக் கட்டினார்.

அந்த க்ஷணமே இரும்பு நாற்காலியைத் தூக்கி அடிக்க வந்த அவனுடைய கைகள் அப்படியே அந்த சேரை தூக்கிய நிலையிலேயே நின்று விட்டது. அவனால் கையை அசைக்கவோ, கீழே இறக்கவோ முடியவில்லை. அவனுடைய கைகள் அந்தரத்தில் கட்டப்பட்டு அப்படியே நின்றது. எரிக் அவன் அருகில் சென்றார். அந்த சேரை அவன் கைகளில் இருந்து வாங்கினார். அந்த நாற்காலியிலேயே அவனை உட்கார செய்து இரட்சிப்பின் நற்செய்தியை அவனுக்கு அறிவித்தார். பின்பு அவனுக்காக ஜெபித்தார். அவர் ஜெபம் செய்து கொண்டு இருக்கும்போதே அவன் கதறி அழுது இரட்சிப்பின் செய்தியை ஏற்றுக் கொண்டான். அன்றோடு அவனிடமிருந்த குடி பழக்கம் போய், ஆண்டவருடைய பிள்ளையாக மாறி, அவனும் அவனுடைய குடும்பமும் லிங்கராஜபுரத்தில் உள்ள ஏஜி சபைக்கு போய்க் கொண்டு இருக்கிறார்கள். இயேசு கிறிஸ்து ஒருவனுடைய வாழ்க்கையில் வந்துவிட்டாலே அவன் ஒரு புதிய சிருஷ்டியாக மாறுகிறானே!

ரௌடிகளுக்கும் சுவிசேஷம்

1985ல் ஜூன் மாதம் ஒருநாள் மாலை நான் ரூமுக்கு திரும்பி வந்தபோது, ரூமில் சாராய வாடை அடித்தது. எனக்கு ஆச்சரியமாக இருந்தது. எரிக் ஒரு மூலையில் அவருடைய துணியைத் துவைத்துக் கொண்டு இருந்தார். நான் அவரை எதுவும் கேட்பதற்கு முன்பாகவே அவரே பேசத் தொடங்கினார். அவர் ஆயிரம் குடிசைப் பகுதிக்கு சென்று வந்ததாகக் கூறினார். அந்தப் பகுதி மிகவும் மோசமான ஒரு பகுதி. கள்ளச்சாராயம் காய்ச்சுதல், கஞ்சா கடத்துதல், கொலை, கொள்ளை, திருடு, வழிப்பறி, விபச்சாரம் எல்லாம் நடக்கிற ஒரு ஏரியா. ரவுடிகள் அதிகம் இருக்கிற ஒரு பகுதி.

அங்கே ஒரு லேடி சாராயம் காய்ச்சி விற்று வந்தாள். அவள் அங்கே ஒரு கேங் லீடர். அடிதடி, கலாட்டா, பழிவாங்குதல், ஒருத்தனுடைய கைகால்களை எடுக்கணும், ஒடிக்கணும், அரசியல் எதிரிகளைத் தாக்கணும் என்றால் அவளிடம் ஒரு வார்த்தை சொன்னால் போதும், காரியத்தைக் கச்சிதமாக முடித்த

விடுவாள். கொலை செய்யவும் அஞ்சாதவள். போலீஸ் அவளிடம் ரெகுலராக மாமூல் வாங்கிக் கொண்டு அவளும் அவளோட கேங்கும் செய்கிற ரௌடித் தனங்களை கண்டு கொள்ளாமல் விட்டு விடுவர். அரசியல் செல்வாக்கும் உள்ளவள். எதற்கும் துணிந்தவள்.

எரிசாராயத்தை எட்டி உதைத்தார் எரிக்

அந்த குடிசைப் பகுதிக்கு எரிக் போய் அவளுக்கும், அவளோடு இருந்த அந்த ரௌடிக் கும்பலுக்கும் கைப்பிரதிகளை கொடுத்து விட்டு அவளிடம் மிகவும் பணிவோடு, 'சிஸ்டர் தயவு செய்து, இந்த தொழிலை விட்டு விடுங்கள். இந்த சாராயத்தினால் நிறைய குடும்பங்கள் பாதிக்கப்படுகின்றனர். விட்டு விடுங்கள் என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டார். அவளுக்குப் பயங்கரமான கோபம் வந்து இவரை கன்னாபின்னாவென்று கெட்ட வார்த்தை சொல்லித் திட்ட ஆரம்பித்து விட்டாள். எரிக் எதைப் பற்றியும் கவலைப் படாமல் மீண்டும் மீண்டும் அவளிடம் பணிவோடு எடுத்துக் கூறினார். இப்போ அவளோட அடியாட்களும் அவளோடு சேர்ந்து கொண்டு முதலில் எரிக்கைத் திட்டினார்கள்.

எரிக்கிற்கு இப்போ கோபம் வந்து விட்டது. அவர் சாராயம் இருந்த மண்பானையைத் தன் காலால் எட்டி உதைத்தார். அந்த பானை உடைந்து அதிலிருந்த சாராயம் எல்லாம் அப்படியே மண்ணில் கொட்டியது. வெறி கொண்ட அந்த லேடி 'டேய் இவனை காலி பண்ணுடா. கையை, காலை ஒடிங்கடா' என்று கெட்ட வார்த்தை சொல்லி திட்டினாள். அதில் ராட்சஷன் போல இருந்த ஒருத்தன் ஒரு பெரிய கிரானைட் கல்லை தூக்கிக் கொண்டு எரிக்கை தாக்க வந்தான்.

அடிக்க ஓங்கிய கை அப்படியே நின்றது!

எரிக் அவனுடைய கண்களை ஊடுருவிப் பார்த்து ஜெபம் செய்து, அவனுக்குள் இருந்த அந்த கொலை வெறியின் ஆவியை கட்டினார். ஓடிவந்த அந்த ரௌடி அப்படியே ஆடாமல் அசையாமல் சிலை போல நின்று விட்டான். கிரானைட் கல்லைத் தூக்கிய கை அப்படியே தூக்கிய நிலையிலேயே நின்று விட்டது.

சுற்றி இருந்த ரௌடிகளும், அந்த சாராயம் காய்ச்சும் லேடியும் 'அந்தக் கல்லால் அவனை அடி. விடாதே' என்று கத்தினார்கள்.

கல்லைத் தூக்கிய அந்த ரௌடி 'என்னால் கையை அசைக்கக் கூட முடியவில்லை.' அந்த ஆளு ஒரு சில வார்த்தைகளை சொன்ன உடனேயே என் கைகளை யாரோ மேலேயே கட்டிப் போட்ட மாதிரி இருக்கு' என்றான். இப்போ அங்கே இருந்த எல்லாருமே ஒரு பயத்தோடும், மரியாதையோடும் எரிக்கைப் பார்த்தனர். எரிக் அந்த ரௌடியின் அருகில் சென்று அந்தக் கல்லை அவனிடமிருந்து வாங்கி தூர எறிந்தார். அதன் பின் அந்த ரௌடி தன் கையை கீழே போட முடிந்தது.

விதைக்கப்பட்ட வார்த்தைகள் வீணாகாதே

எரிக் அங்கே இருந்தவர்களுக்கு ஆண்டவரைப் பற்றியும், பாவத்தைக் குறித்தும் நரகத்தைக் குறித்தும் எடுத்துக் கூறினார். ஒருத்தரும் ஆடவில்லை, அசையவில்லை. எரிக் சொன்ன ஒவ்வொரு வார்த்தையும் அவர்களின் உள்ளத்தில் தைத்திருக்க வேண்டும். மௌனமாக கேட்டுக் கொண்டார்கள்.

ஆண்டவரின் வார்த்தை விதைக்கப்பட்டு விட்டது. ஏற்ற வேளையில் அது பலன் தராமல் போகாது. ஆண்டவரின் வார்த்தைகள் விருதாவாகப் போகாதே. பின்பு அந்த ரௌடிக் கும்பலே எரிக்கை மரியாதை யோடும், பயபக்தியோடும் ரோடு வரை கூட வந்து அவரை வழி அனுப்பி வைத்தது.

சாராயக் கடையிலும் சத்தியவார்த்தை

எரிக் இந்தியாவில் இருந்தபோது அவருக்கும் சோதனை வராமல் இல்லை. ஆனால் ஆண்டவரோடு அவருக்கு எப்போதும் இருந்த நெருக்கத்தினால் அந்த சோதனையையும் வென்று வந்தார். அவர் டேவிட்டோடு தங்கி இருந்தபோது தவறாமல் ஞாயிற்றுக் கிழமை ஏ.ஜி. சர்ச்சில் நடக்கும் இங்கிலீஷ் ஆராதனைக்கு செல்வது வழக்கம். அவர் ஒரு சண்டே சர்வீஸைக் கூட மிஸ் பண்ணியது கிடையாது.

ஒரு சண்டே ஒரு இளம் ஆங்கிலோ இந்தியன் லேடி இவரை தன் வீட்டிற்கு அழைத்தாள். எரிக் அங்கே போனபோது அவள்

எரிக்கை விரும்புவதாகவும், தன் கணவர், பிள்ளைகளை விட்டு விட்டு எரிக்குடன் வரத் தயார் என்று கூறினாள். எரிக் 'நீ சொல்வது நினைப்பது எல்லாமும் தேவ சித்தத்திற்கு, வேத வார்த்தைக்குப் புறம்பானது' என்று கூறி, அவளுக்கு புத்திமதி கூறி, ஜெபித்து விட்டு வந்தார்.

நானும் எரிக்கும் அடிக்கடி ஒன்றாக சேர்ந்து போய் சுவிசேஷத்தை அறிவிப்போம். ஒரு தடவை நாங்கள் இருவரும் பிடாடி (Bidadi) சென்றோம். பிடாடி பெங்களூரிலிருந்து 36 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. காலையில் 8 மணிக்கு ஆரம்பித்து இரவு 8 மணிக்குத்தான் முடித்தோம். பிடாடிக்கு நாங்கள் சைக்கிளில் சென்றிருந்தோம். சிவாஜி நகருக்கு நாங்கள் திரும்பி வரும்போது இரவு 11 மணி ஆகிவிட்டது. வரும்போது நாங்கள் ஒரு மதுக்கடையை (bar) தாண்டி வரவேண்டி இருந்தது. அங்கே உள்ளே ஏகப்பட்ட கூட்டம் இருந்தது. அனைவருமே குடித்துக் கொண்டு இருந்தனர்.

எரிக் சைக்கிளை நிறுத்தி விட்டு அந்த பாருக்குள்ளே போய் அங்கே இருந்த அனைவருக்கும் கைப்பிரதியைக் கொடுத்தார். அந்த பாரின் உரிமையாளருக்கும் டிராக்சை கொடுத்தார். நான் வெளியேவே நின்று கொண்டு இருந்தேன். உள்ளே எவருமே எரிக்கின் செய்கையை தடுக்கவும் இல்லை, எதிர்க்கவும் இல்லை. சில சமயம் ஆண்டவர் எரிக்கை மிக விநோதமாக, வித்தியாசமாக பல தைரியமான காரியங்களைச் செய்யவும் பயன்படுத்துகிறார். யாருமே போவதற்கு அஞ்சும் அல்லது தயங்கும் இடங்களுக்கும் எரிக் துணிந்து சென்று ஆண்டவரைப் பற்றி கூறி விட்டு வந்தார். இது ஒரு பைத்தியக் காரத்தனமான செயல் அல்ல. இது அவரின் ஆத்தும பாரத்தையே காட்டுகிறது. அழிந்து கொண்டிருக்கும் ஆத்துமாக்களுக்காக அவர் அழுது பல மணி நேரங்கள் முழங்காலில் நிற்பதை நான் பார்த்திருக்கிறேன்.

எரிக்கின் ஆத்மபாரம் நம் கண்களைத் திறக்கட்டும்

அவர் முழங்கால் படியிட்டு ஜெபித்தது தன் இனத்தார் ஜனத்தாருக்காக அல்ல. அவரின் தேச மக்களுக்காகவோ, அவர் பேசும் மொழி, இன, ஜாதி மக்களுக்காகவோ அல்ல. முன்பின்

தெரியாத, பாஷை தெரியாத, நம் தேசத்து மக்களுக்காக. ஆனால் நாமோ..? சற்றே யோசித்துப் பார்ப்போம்.

அப்படி யோசித்துப் பார்த்தால் நாம் வெட்கித்தான் தலைகுனிய வேண்டி இருக்கும். நாம் எவ்வளவு நிர்விசாரமாக, ஆத்தும பாரமின்றி வெறும் பேர்க் கிறிஸ்தவர்களாக, பெயரில் கிறிஸ்தவர் களாக, சண்டே கிறிஸ்தவர்களாக மாத்திரம் இருக்கிறோம்! எரிக்கோடு நான் உடன் வசித்த அந்த சில ஆண்டுகள் என்னை அது பலப்படுத்தியது, புடமிட்டது. நான் அதுவரை வாழ்ந்த வாழ்க்கையை திரும்பிப் பார்க்க வைத்தது.

இனி ஆண்டவருக்காகவே நாம் வாழவேண்டும், ஆண்டவருக்கு ஏதாவது செய்ய வேண்டும், அழிந்து கொண்டு இருக்கும் ஆத்துமாக்களுக்கு பாரப்பட்டு ஜெபிக்க வேண்டும் என்கிற அனலை அக்கினியை எனக்குள் பெற்றுக் கொண்டேன். அதுவே என்னை ஒரு ஊழியக்காரனாக ஆக்கியது. ஒரு ஜெப வீரனாக ஆக்கியது. நமது தேசத்துக்காக, கர்நாடக மாநிலத்துக்காக ஜெபிக்க வேண்டும் என்கிற ஒரு தாகத்தைக் கொடுத்து கல்வாரி ஜெப ஐக்கியத்தையும் உருவாக்கக் காரணமாக இருந்தது.

கரெண்ட் கனெக்ஷனின் ஆர்டர் கையில் கிடைத்தது

என்னுடைய நண்பர்களில் ஒருவர் கோரமங்களாவில் ஒரு வீடு ஒன்றைக் கட்டினார். அந்த வீட்டிற்கு கரண்ட் கனெக்ஷன் வேண்டி E.B. க்கு அப்ளை பண்ணினார். இரண்டு மாசமாக அவர் நடையாக நடந்தும், E.B. யில் பல அதிகாரிகளைப் பார்த்துக் கேட்டும் எதுவும் நடக்கவில்லை. கரண்ட் கனெக்ஷன் கொடுக்க அவர்கள் லஞ்சம் எதிர்பார்த்தனர். என்னுடைய ஃபிரண்டுக்கு லஞ்சம் கொடுக்க மனதில்லை.

ஒருநாள் மாலை நேரம் நானும் எரிக்கும் அவனுடைய வீட்டுக்குப் போனபோது, இதைக் கூறி என் நண்பன் மிகவும் வருத்தப்பட்டான். நாங்கள் மூன்று பேரும் அவனுடைய வீட்டிலேயே ஒரு மணி நேரம் இதுக்காக ஜெபம் செய்தோம். நாங்கள் ஜெபித்துக் கொண்டு இருக்கும்போதே அந்த KEB இன்ஜினியர் எலக்ட்ரிசிட்டி கனெக்ஷன் ஆர்டரை கொண்டு

வந்து கையில் கொடுத்தார். ஜெபத்தின் வல்லமையைப் பாருங்கள்.

நம் தேவன் ஜெபத்துக்கு பதில் அளிக்கிற தேவனாக இருக்கிறார். அவர் ஜீவனுள்ள தேவனல்லவா? அவர் நம்மைக் காண்கின்ற தேவனல்லவா? அவர் நம்மோடு எப்போதும் இருந்து நம் வேண்டுதல்களுக்கெல்லாம் செவி சாய்க்கிற தேவனாக இருக்கிறாரே! அந்த KEB இன்ஜினியர் பொதுவாக மாலை 5.30 மணி வரை வேலை செய்வார். அவர் என் நண்பனின் EB கனெக்ஷன் ஆர்டரை அவர் வீட்டுக்கு எடுத்துப் போயிருக்கிறார். பணம் வாங்கிக் கொண்டு கொடுக்கலாம் என்று. வீட்டில் இருக்க முடியவில்லை. நேரடியாக என் நண்பன் வீட்டுக்கே வந்து கொடுக்கும்படி அவர் உள்ளத்தில் ஒரு ஏவுதல். அல்லேலுயா! நாங்கள் அனைவரும் பின்பு மீண்டுமாய் முழங்கால் படியிட்டு ஆண்டவருக்கு நன்றி கூறினோம்.

கரீம் கர்த்தரின் ஊழியக்காரர் ஆனார்

ஜனங்களைத் தொடுவதற்கு ஆண்டவர் எரிக்கை பயன் படுத்தினார் என்பதற்கு இன்னுமொரு சாட்சியைப் பாருங்கள். எரிக் தினமும் நிறையப் பேருக்கு கைப்பிரதியைக் கொடுப்பார். சுவிசேஷத்தை அறிவிப்பார். ஒரு சமயம் லிங்கராஜபுரத்தில் வசித்த கரீம் என்கிற ஒரு முஸ்லீமுக்கு சுவிசேஷத்தை அறிவித்து ஒரு பைபிளையும் அவருக்கு கொடுத்தார். கொடுத்துவிட்டு சுவிசேஷத்தை அறிவிப்பதோடே நின்றுவிடவில்லை. கொடுத்து விட்டு தொடர்ந்து அவர்களுக்காக ஜெபம் பண்ணுவார். கரீம் ஏழு மாதம் தொடர்ந்து பைபிளைப் படித்தார். இயேசுவை சொந்த இரட்சகராக பல எதிர்ப்புகளின் மத்தியில் ஏற்றுக் கொண்டார். லிங்கராஜபுரத்திலுள்ள ஏ.ஜி சர்ச்சுக்கு ரெகுலராக சென்றார். பின்பு Southern Asia Bible College லும் சேர்ந்து தியாலஜி படித்து தேறினார். இன்று அவர் ஒரு AG சர்ச் பாஸ்டராக இருக்கிறார். இப்படி எரிக் பெங்களூரில் இருந்தபோது ஆண்டவர் அவரை பலரின் வாழ்க்கையை மாற்றி அமைவதற்கு வல்லமையாக எடுத்துப் பயன்படுத்தினார்.

சாய்பாபாவிற்கும் சுவிசேஷம்

1985 நவம்பர் 24ம் தேதி சாய்பாபாவை சந்திப்பதற்கு எரிக் புட்டபர்த்திக்கு கிளம்பினார். அடுத்த நாள் சாய்பாபாவுக்கு 60வது பிறந்த நாள். அன்றைக்கு அவரிடமிருந்து ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வதற்கு லட்சக் க்ணக்கில் ஜனங்கள் ஆசிரமத் திற்கு வருவார்கள். அவருடைய பிறந்த நாள் விழாவில் பங்கு பெற நமது தேசத்தின் குடியரசுத் தலைவர், பிரதம மந்திரி, மத்திய அரசு மந்திரிகள், கர்நாடகா முதல் மந்திரி, அவருடைய சட்டசபை மந்திரிகள், பெரிய பெரிய தொழிலதிபர்கள், உலகத்தின் பல மூலைகளிலிருந்தும் பல லட்ச ஜனங்கள் பங்கு பெற்ற மாபெரும் விழா அது.

கூட்டம் அலைமோதுகிறது. அவரைப் பணிந்து குனிந்து நமஸ்கரித்து அவரின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ள லைன் லைனாக கியூவில் ஜனங்கள் நிற்கின்றனர். ஒரு மனுஷனைப் பார்ப்பதற்கு இவ்வளவு கூட்டமா? எப்பேர்ப்பட்ட உயர்ந்த பதவியில் இருப்பவர்களும் ஒரு மனிதனின் காலில் போய் இப்படி விழுகிறார்களே' என்று எரிக்கிற்கு ஒரே ஆத்திரம். இதில் பல வெளிநாட்டு ஆண்களும் பெண்களும் வேறு இருந்தனர்.

உண்மையான மெய் தேவனை விட்டு மனுஷனையும், மனிதன் படைத்த விக்கிரஹங்களையும் இப்படிப் போய் ஆராதிக் கின்றனரே என்கிற ஆதங்கம். ஜனங்களின் மூட நம்பிக்கையைக் கண்டு அவருக்கு ஆத்திரமான ஆத்திரம். அவரால் தாங்க முடியவில்லை. கூட்டத்தில் முண்டியடித்துக் கொண்டு பாபாவின் அருகில் சென்றார்.

You are not God, You are only a man. Jesus is God

போலீஸ், பாதுகாப்புப் படை என்ற பலர் பாபாவைச் சுற்றி நின்று கொண்டு இருந்தனர். எரிக் பாபாவிற்கு முன்னால் போய் நின்று கொண்டு உரத்த குரலில், **You are not God, You are only a man. Jesus is God** அவர் முகத்துக்கு நேராகக் கூறினார். பாபாவிற்கு பயங்கர ஷாக். மேற்கொண்டு எரிக் எதுவும் சொல்வதற்கு முன்பாக பாபாவைச் சுற்றியிருந்த போலீஸ் மற்றும்

பாதுகாவலர்கள் எரிக்கை தரதரவென்று கையைப் பிடித்து ஒரு சைடுக்கு இழுத்துச் சென்றனர்.

அப்படி இழுத்துச் செல்லுகின்ற சமயத்திலே எரிக் அங்குள்ள கூட்டத்தைப் பார்த்து 'எனக்கு அன்பான சகோதர, சகோதரிகளே, இயேசு கிறிஸ்து நம் அனைவரின் பாவங்களுக்காக கல்வாரி சிலுவையிலே ரத்தம் சிந்தி மரித்தார். அவர் ஒருவரே கடவுள். அவரே வழியும், சத்தியமும், ஜீவனுமாய் இருக்கிறார்' என்று உரத்த குரலில் சத்தமாகக் கூறினார். அவர் இதைச் சொல்லிக் கொண்டு இருக்கும்போதே பவர் கட்டாகி மின்சாரம் இல்லாமல் போய்விட்டது. அடுத்து ஒரு 30 நிமிடங்களுக்கு கரண்ட் வரவில்லை.

சுவிசேஷத்தின் நிமித்தம் பாடுகள்

போலீஸ் எரிக்கை அரெஸ்ட் செய்து போலீஸ் ஸ்டேஷனுக்கு இழுத்துச் சென்றனர். அங்கே அவரை பல போலீஸ் சுற்றி வளைத்துக் கொண்டு லத்தியினால் 60 தடவைக்கும் மேலே போட்டு வெளுத்து விட்டனர். ஒவ்வொரு முறையும் அவர் மேல் அடி விழுகின்ற சமயத்தில் 'இயேசு உங்களை நேசிக்கிறார்' என்று கர்த்தரை மகிமைப்படுத்திக் கொண்டே இருந்தார். பலர் சேர்ந்து காட்டு மாட்டுத்தனமாக அடித்ததில் அவரின் கைகால் ஒடியும் அல்லது மயக்கமாகி கீழே விழுவார் என்று அனைவரும் எண்ணினர். ஆனால் அவர் அத்தனை அடிகளையும் எவ்வித சப்தமும் இன்றி அமைதியாக நின்று வாங்கிக் கொண்டு அப்படியே சிலை போல நின்றார். அவர் இப்படி நிற்பதைக் கண்ட பிறகு இவருக்குள் ஏதோ ஒரு தெய்வீக சக்தி இருக்கிறது என்று எண்ணி பயந்து மேற்கொண்டு அடிப்பதை நிறுத்தினர்.

பாபாவைக் கொலை செய்ய முயற்சி என கேஸ்

அந்த போலீஸ் ஸ்டேஷனின் இன்ஸ்பெக்டர் சாய்பாபாவின் தீவிர பக்தர். அவர் எரிக்கை 'எதற்காக நீ பாபாவின் பிறந்த நாளுக்கு வந்தாய்?' என்று விசாரித்தார். 'இயேசு கிறிஸ்துதான் கடவுள்' என்று நான் பாபாவிடமும் அங்கே கூடியிருந்த ஜனங்களிடமும் சொல்ல விரும்பினேன் என்று பதில் உரைத்தார்.

போலீஸ் அவர் சொன்னதை மறுத்து 'இல்லை, நீ பாபாவை கொல்லுவதற்காகத்தான் வந்தாய். உண்மையைச் சொல்' என்று மீண்டும் மீண்டும் வற்புறுத்திக் கேட்டனர். 'பாபாவைச் சுற்றி நாலு லட்சம் பேர் சுற்றி இருக்கும்போது, யாராவது அவரைக் கொலை செய்ய நினைக்க முடியுமா? அவரைக் கொலை செய்யும் நினைப்பு எனக்கு இருந்தால், என்னிடம் ஏதேனும் கொலைக் கருவி இருக்கணுமே. இருக்கா பாருங்கள். என்னிடம் வெறும் ஒரு எ[illegible]ளும், கொஞ்சம் கைப்பிரதிகளும் மாத்திரமே இருக்கிறது' என்று தன்னுடைய பையைக் காட்டினார். இருந்தாலும் அந்த மாவட்ட போலீஸ் அவர் மீது கொலை முயற்சி என்று கேஸ் பதிவு செய்தது.

என் ரூமில் போலீஸ் ரெய்டு

1985 நவம்பர் 25ம் தேதி மாலை 5 மணிக்கு, நான் என்னுடைய வேலையில் இருக்கும்போது உடனே என்னோட ரூமுக்குப் போகணும் என்று ஏனோ ஒரு உந்துதல் வந்து கொண்டே இருந்தது. நார்மலாக நான் 7 மணிக்குத்தான் வேலையை விட்டு திரும்பச் செல்வேன். எனக்கு இருந்த ஒரு வேலையைத் தள்ளி வைத்து விட்டு, நான் என் ரூமை நோக்கி நடந்தேன். என்னோட ரூமுக்கு அருகில் நான் வந்தபோது என் ரூமின் அருகில் உள்ள ஒருவரால் நான் தடுத்து நிறுத்தப்பட்டேன். 'இப்போ உன்னோட ரூமுக்கு நீ போகாதே. ஏகப்பட்ட ஆந்திரா போலீஸூம், கர்நாடகா போலீஸூம் உன் ரூமில் இருக்கிறார்கள். அவர்களோடு உன்னோட ஆங்கிலேய நண்பரும் இருக்கிறார்' என்றார்கள். 'நான் ஏன் போகக் கூடாது. நான் எந்தத் தப்பும் பண்ணலையே. நான் எரிக்கைப் பார்க்கணும்' என்று கூறியவாறே என் ரூமிற்குள் நுழைந்தேன். என் ரூம் முழுக்க போலீஸ்.

என்னிடமும் போலீஸ் விசாரணை

நான் எரிக்கைப் பார்த்தேன். Praise the Lord என்று கூறியவாறே கைகுலுக்கினேன். அவருடைய முகம், கை கால் எல்லாம் பயங்கரமாக அடிபட்டு, ரத்தக் காயங்களுடன் வீங்கி இருந்தது. அவரின் நிலையைப் பார்த்து எனக்கு மிகவும் வேதனையாக இருந்தது. எனக்கு உள்ளத்தில் சற்று பயமாக இருந்தது.

என்னையும் எரிக்கை அடித்தது போல அடிப்பார்களோ என்று. போலீஸ் என் ரூமில் உள்ள எல்லா ஐயிட்டங்களையும் சோதனையிட்டனர். என்னை உட்காரச் சொல்லி, என்னைப் பற்றி, என் சொந்த ஊர், படிப்பு, பள்ளிப் பருவம், நான் ஏன் தமிழ் நாட்டிலிருந்து பெங்களூர் வந்தேன் என்பன போன்ற பல கேள்விகளைக் கேட்டனர். நான் கூறிய எல்லாவற்றையும் ஒரு நோட்டில் எழுதிக் கொண்டனர்.

பெனுகொண்டா கோர்ட்டில் வழக்கு

அந்த சமயத்தில் நான் ரட்சிக்கப்பட்டு ஒரு வருஷமே ஆகியிருந்தது. 1984ல் நான் ஞானஸ்நானம் பெற்றேன். நான் ஒரு இந்துக் குடும்பத்தைச் சேர்ந்தவன் என்று தெரிந்தவுடன் போலீஸ் என்னிடம் மிக அதிகமாக கேள்விகள் கேட்டனர். நான் எப்படி ரட்சிக்கப்பட்டேன் என்பதைக் கூறினேன். என்னால் எல்லா வற்றையும் முழுமையாக, விவரமாகக் கூற முடியவில்லை. சுருக்கமாகக் கூறினேன்.

எரிக்கை நான் எப்படி சந்தித்தேன் என்றும், அவருக்கு உன்னை எப்படித் தெரியும் என்றும், நீயும் அவர் கூட ஒரு வேவுக்காரனா (Spy), தீவிரவாதியா? என்றெல்லாம் பல கேள்விகளைக் கேட்டனர். நான் அவரை எப்படி அவர் கைப்பிரதி கொடுக்கும் போது சந்தித்தேன் என்று கூறினேன். இப்போது இருவரும் சேர்ந்தே சுவிசேஷம் அறிவிக்கிறோம் என்றும் கூறினேன்.

விசாரணை எல்லாம் முடிந்து, போலீஸ் வெளியே செல்லும் போது அந்த போலீஸ் ஆபீஸரிடம் கேட்டேன். எரிக் என்ன குற்றம் செய்தார் என்று அவரை அரெஸ்ட் செய்திருக்கிறீர்கள்? அவர் மீது என்ன கேஸ் போட்டிருக்கிறீர்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் 'நீங்கள் கேட்கும் கேள்விக்கு நான் பதில் சொல்லணும்ங்கிற அவசியம் இல்லை. இருந்தாலும் அவர் மேல என்ன கேஸ் போடப்பட்டு இருக்குன்னு தெரியணும்னா, டிசம்பர் 5ம் தேதி ஆந்திராவில் உள்ள பெனுகொண்டா கோர்ட்ல நடக்கப் போகிற கோர்ட் ஹியரிங்கிற்கு வாங்க. தெரிஞ்சுப்பீங்க' என்று கூறிவிட்டு எரிக்கை அழைத்துக் கொண்டு சென்று விட்டனர்.

எரிக்கை அறிந்த எவரும் உதவ முன்வரவில்லை

அன்று இரவு என்னால் தூங்க முடியவில்லை. எரிக்கை எப்படி ஜெயிலிலிருந்து, வெளியே கொண்டு வருவது என்று பலவிதமான யோசனைகளை செய்து கொண்டு இருந்தேன். யாரு நமக்கு ஹெல்ப் பண்ணுவாங்க? யாரு நம்ம கூட கோர்ட்டுக்கு வருவாங்க என்று திங்க் பண்ணிக் கொண்டு இரவு முழுவதும் அன்று தூங்கவில்லை. காலையில் எழுந்தவுடன் என்னுடைய சைக்கிளை எடுத்துக் கொண்டு பெங்களூர் சிட்டியிலுள்ள சீனியர் பாஸ்டர்களைப் பார்ப்பதற்கு சென்றேன். எரிக்கை அறிந்த, பெங்களூர் கிறிஸ்டியன் சர்க்கிளில் அனைவருக்கும் தெரிந்த ஒரு சீனியர் பாஸ்டரைப் போய்ப் பார்த்தேன். அவரிடம் எரிக்கின் அரெஸ்ட் பற்றிக் கூறி, அவரை ரிலீஸ் செய்வதற்கு உதவி செய்யுமாறு வேண்டினேன். அந்த பாஸ்டரோட பதில் எனக்கு அதிர்ச்சியைத் தந்தது.

'என்கிட்ட அமெரிக்க டாலர்கள் ஒரு லிமிட்டுக்கு மேலே இருக்கு. நான் உனக்கும், எரிக்கிற்கும் உதவி பண்ணினேன்னா, போலீஸ் என்னையும் விசாரிப்பாங்க. என்ன தொடர்புன்னு செக் பண்ணி என்னோட வீட்டையும் சோதனை போடுவாங்க. தேவையில்லாம எனக்கு பல பிரச்சனைகள் வரும். ஐயாம் சாரி, என்னால ஹெல்ப் எதுவும் செய்ய முடியாது'ன்னு சொல்லிட்டாரு. நான் அப்படியே நொந்து போயிட்டேன்.

அடுத்து ஒரு பைபிள் காலேஜ் வச்சிருக்கிற ஒரு சீனியர் ரெவரெண்டைப் பார்க்கப் போயி, அவரிடம் எரிக்கைப் பற்றி கூறி உதவும்படி கேட்டேன். அவரோட பதில் இன்னும் என் மனதை நொறுக்குவதாக இருந்தது. 'எரிக் ஒரு பைத்தியம் பிடிச்சவன். சாய் பாபா கிட்டே போயி எதுக்காக சுவிசேஷத்தை அறிவிக்கணும்? சுவிசேஷத்தை அறிவிக்கிறது வேற ஆளா கிடைக்கலை? ஐயாம் சாரி. நான் ரொம்ப பிசியா இருக்கேன். என்னால எதுவும் செய்ய முடியாது'ன்னுட்டாரு.

எனக்கு என்ன பண்ணறதுன்னே தெரியலை. அடுத்த நாள் ஒரு பாஸ்டர்ஸ் மீட்டிங்கிற்கு சைக்கிளை எடுத்துக்கிட்டுப் போனேன். அங்க நெறைய பாஸ்டர்ஸ் இருந்தாங்க. அவங்க

கிட்டே எரிக்கைப் பற்றிக் கூறி, அவரின் அரெஸ்ட்டை பற்றியும் சொல்லி உதவி செய்யுமாறு கேட்டேன். அவங்க 'எரிக் ஒரு வெளிநாட்டுக்காரர். அவங்க ஆளுங்க அவருக்கு ஹெல்ப் பண்ணுவாங்க. நீ அரெஸ்ட் ஆனேன்னா, உனக்கு யாரு ஹெல்ப் பண்ணுவாங்க? பேசாம நீ உன்னோட வேலையை மாத்திரம் பாரு. அதுதான் புத்திசாலித்தனம்' என்று அட்வைஸ் செய்தனர்.

நான் சந்திச்ச சீனியர் பாஸ்டர்கள் அனைவருமே நல்ல அனுபவ முள்ளவர்கள். வசதி படைத்தவர்கள். செல்வாக்கு உள்ளவர்கள், பல நாடுகளுக்கு அடிக்கடி செல்லுகிறவர்கள். ஆனால் யாருமே எனக்கு ஹெல்ப் பண்ணத் தயாராக இல்லை. நான் மனம் உடைந்து நொந்து போயி என் ரூமுக்கு வந்தேன். என்னையும் அறியாமல் என் கண்களில் கண்ணீர். ஆண்டவரிடம் கதறி அழுதேன். 'ஆண்டவரே! எனக்கு உதவி செய்ய யாருமே இல்லை. நான் உம்மை நம்புகிறேன். எனக்கு உதவி செய்யும். இந்த கேஸ் முடிகிற வரைக்கும் நான் எரிக்கோடு இருக்க எனக்கு பெலனைத் தாரும்' என்று ஜெபித்தேன்.

டிசம்பர் 5ம் தேதி நான் இரண்டு நண்பர்களோடு பெனகுண்டாவுக்கு டிரெயின் ஏறினேன். பெங்களூரிலிருந்து பெனகுண்டா 180 கி.மீ. அங்கே ரயில்வே ஸ்டேஷனில் இறங்கி, ஒரு குதிரை வண்டியில் பெனகுண்டா டவுனுக்குள்ளே போனோம். நாங்க ஒரு இரண்டு கிலோ மீட்டர் டிராவல் செய்திருப்போம். வழியிலே ஒரு பேப்டிஸ்ட் சர்ச் ஒன்றைப் பார்த்தோம். அங்க இறங்கிக்கிட்டோம்.

சர்ச்சுக்குள்ள போயி கொஞ்ச நேரம் பிரேயர் செஞ்சுட்டு அப்புறம் மேற்கொண்டு போகலாம்னு உள்ளே போனோம். சர்ச்சுல பாஸ்டர் இருந்தார். அவர் எங்களை வரவேற்று எங்கேயிருந்து நாங்க வர்றோம்னு கேட்டார். நான் என்னை அறிமுகப்படுத்திக் கொண்டு எதற்காக நாங்க பெனகுண்டா வந்திருக்கோம்னு சொன்னோம். அந்த பாஸ்டர் ஒரு வக்கீலிடம் எங்களை அழைத்துப் போனாரு. அங்கே ரவிகுமார், அபுபக்கர் என்ற இரண்டு லாயர்கள் இருந்தாங்க. ரவிகுமார் பேப்டிஸ்ட் சர்ச்சின் செகரட்டரியாகவும் இருந்தார்.

அவர் எரிக்கை ஜெயிலில் சந்தித்தவர்களையும், எரிக் நடந்தது [illegible] அவரிடம் [illegible] [illegible] [illegible] பேட்டி கண்டு [illegible] [illegible]. அவர் [illegible] பற்றிய [illegible] தகவல்களைக் கொடுப்பதாக [illegible] எரிக் [illegible] அவர் கூறினார். [illegible] ஆச்சரியமாக [illegible] ஆச்சரியமான அந்த பேட்டியில் [illegible] [illegible] [illegible].

டெலகிராஃபில் உள்ள பாண்டியின் உதவியில்லை என்றாலும் இந்த டெலிகிராஃபில் இரண்டு பக்கங்களை ஆண்டவர் ஏற்பாடு செய்து வைத்து விட்டார். ஆண்டவர் ஒரு [illegible] நம்மை விட்டு விலகுவதில்லை. அவர் நம்மை ஒருபோதும் கைவிடுவதில்லை என்ற நம்பிக்கை நாளுக்கு நாள் வளர்ந்து அதிகரித்து அவரண்டையில் என்னை இன்னும் அதிகமாக கிட்டிச்சேர வைத்தது.

அந்த இரண்டு வாய்ப்புகளுமே எரிக்கின் வேலை [illegible] [illegible] இல்லாமல் எடுத்து [illegible] கூறினார். அவர்கள் [illegible] [illegible] இன்னும் [illegible] பார்த்து காத்திருக்கு நன்றி கூறுகிறேன். [illegible] எரிக்கின் நிலைமையை பேட்டியில் [illegible] எடுத்துக் கூறினார். அந்த சமயம் எரிக் ஜெயிலில் இருந்த போது அவரின் தேவைகளை எல்லாம் சந்தித்துக் கொண்டு [illegible] [illegible] அவர் ஒருபோதும் கைவிடுவதில்லையே. அல்லேலூயா!

எரிக் நாடு கடத்தப்பட்டார்

எரிக் 8 மாதம் டொமினிகன்ட்டா ஜெயிலில் இருந்தான். போலீஸ் அவர் மீது [illegible] கொலை செய்ய முயற்சி என்று கேஸ் பதிவு செய்தனர். அவர்களால் அதை நிரூபிக்க முடியவில்லை. பிறகு அந்த கேசை வாபஸ் வாங்கிவிட்டு [illegible] [illegible] [illegible] இல்லாமல் அவர் இந்தியாவில் இருந்தார் என்று ஒரு கேசைப் போட்டு அவரை கட்டாயமாக நாட்டை விட்டு வெளியேற்ற முயன்றனர்.

எரிக் திரும்பிச் செல்வதற்கு மறுத்தார். கவர்ன்மெண்ட்டே அவரை திருப்பி அனுப்ப பிரயாணச் செலவுக்கு ரூ.15,000/-ம் சாங்ஷன் செய்து ஜூலை 9 அன்று ஜெயிலிலிருந்து ரிலீஸ் செய்து வலுக்கட்டாயமாக அவரை கனடாவுக்கு டிபோர்ட் செய்தது. கொலை முயற்சி என்று கேஸ் போட்டதிலிருந்து அதைக் குறித்து பேப்பர்களில் அதிகம் நியூஸ் வராதபடியும், அதிக பப்ளிசிட்டி ஏற்பட்டு ஆசிரமத்திற்கு கெட்ட பெயர் வராதபடியும் பார்த்துக் கொண்டனர். எரிக் மீது போடப்பட்ட கொலை முயற்சி கேஸ் உண்மையானதாக இருந்திருந்தால், கவர்ன்மெண்ட் ஏன் அந்தக் கேசை பின்பு வாபஸ் வாங்க வேண்டும்? கொலை முயற்சியை நிரூபிக்க ஏதேனும் ஆதாரங்கள் கிடைத்ததா?

அப்படி உண்மையிலேயே சாய்பாபாவை கொலை செய்ய முயன்றவரை ஏன் சட்டத்தின் முன் நிறுத்தாமல், தண்டிக்காமல், வலுக்கட்டாயமாக கனடாவுக்குத் திருப்பி அனுப்பணும்? என்கிற கேள்விகளுக்குப் பதிலே கிடையாது. அவரை ஜெயிலிலிருந்து ரிலீஸ் செய்ததற்கு மற்றும் ஒரு காரணம் எரிக் ஜெயிலுக்குள்ளும் சும்மா இருக்கவில்லை. அங்கு காலவரையற்ற உண்ணாவிரதம் இருந்தார். ஜெயிலில் இருந்த அனைவருக்கும் சுவிசேஷத்தை அறிவித்து வந்தார். எரிக்கைப் பற்றி The Week பத்திரிகை 18.7.1993 அன்று செய்தி வெளியிட்டது. Fore runner ம் செய்தி வெளியிட்டது. கனடாவிற்கு திருப்பி அனுப்பப்பட்ட எரிக் அங்கு சென்றும் சும்மா இருக்கவில்லை. அங்கும் ஆண்டவருக்கு ஊழியம் செய்தார்.

டேவிட்டும் அவர் பெற்றோர்களும் அரெஸ்ட் ஆனார்கள்

எரிக் ஜெயிலில் இருந்தபோது, அடிக்கடி பாஸ்டர் டேவிட்டுக்கு கடிதம் எழுதுவார். அக் கடிதங்களை கண்காணித்த காவல் துறை பாஸ்டர் டேவிட்டிற்கும் இதில் ஏதோ தொடர்பு இருக்கிறது என சந்தேகித்து பாஸ்டர் டேவிட்டை 1986 மார்ச் 10 அன்று அரெஸ்ட் செய்தனர். பாஸ்டர் டேவிட்டின் தாய் தகப்பன் இருவரையும் சீர்காழியில் அரெஸ்ட் செய்து காவலில் எடுத்து விசாரித்தனர். தவறான எண்ணத்தோடு கூடிய தொடர்புக்கு

எவ்வித ஆதாரமும், அடையாளங்களும் இல்லாத நிலையில் பாண்டி டு விட்டனரும். அவரது பெற்றோர்களையும் பிரஞ்சு விடுவித்தனர்.

எங்கோ பிறந்தவர்களுக்கு நம் தேசத்தைக் குறித்து பாரம் இருக்கு, நமக்கு...?

எங்கோ பிறந்து எங்கோ வளர்ந்த வர்க்கிறது நமது தேச மக்களின் மீது ஒரு பாரம், ஆதங்கம் இருந்தது. அதற்காக பல துன்பங்களையும் பாடுகளையும் அனுபவித்தனர். அவர் எவ்வித வசதி வாய்ப்பும் இல்லாமல், சாப்பாட்டிற்குக் கூட வழியில்லாமல், தங்குவதற்கு சரியான இடமும் இல்லாமல், [illegible] பல மைல்கள் பயணம் செய்து சுவிசேஷத்தை அறிவித்து பலரை ஆண்டவருடைய இராஜ்ஜியத்திற்குள் கொண்டு வந்தார். அதே போல எத்தனையோ வெளிநாட்டு மிஷனரிகள் நமது தேசத்திற்கு வந்து அரும்பாடு பட்டனர். பல இழப்புகளை எதிர்ப்புகளை சந்தித்தனர். இதையெல்லாம் யாருக்காக செய்தனர்? முன்பின் தெரியாத நம் தேசத்தின் மக்களுக்காக இத்தனை கஷ்டங்களையும் அனுபவித்தனர். அவர்கள் பட்ட பாடுகள் கொஞ்ச நஞ்சமல்லவே.

இயேசு கிறிஸ்துவினுடைய நேரடி சீஷரான செயின்ட் தாமஸ் வந்து இங்கு அநியாயமாக கொலையுண்டு இறந்தார். வில்லியம் கேரியின் மனைவி, பிள்ளைகள் எல்லாம் இங்கு வந்து அவர் கண்ணுக்கு முன்னாடியே வியாதிப்பட்டு இறந்தனர். அடக்கம் பண்ணக் கூட உதவிக்கு ஆட்கள் இல்லாத நிலையில் அவரே குழி தோண்டி, அவர்களை தனியாக தூக்கி எடுத்து அடக்கம் பண்ணினார். இதையெல்லாம் செய்தது அவரோட தலைவிதியினாலா அல்லது சாபத்தினாலா? நம் தேசத்துடைய ஜனங்களின் இரட்சிப்பிற்காக, நமக்காக மரித்த இந்த மெய் தேவனை ஜனங்கள் அறிந்து கொள்ளணுமே என்கிற ஆதங்கத்தில் இத்தனை பாடுகளையும் மனமுவந்து ஏற்றுக் கொண்டு தொடர்ந்து இங்கு ஊழியம் செய்தனர்.

ஆஸ்திரேலியன் மிஷனெரிகளான கிரஹாம் ஸ்டேன்ஸ், அவரோட இரண்டு பச்சிளம் குழந்தைகளையும் அவர் கண்ணுக்கு

முன்னாலேயே உயிரோடேயே பெட்ரோல் ஊற்றிக் கொளுத்தி, புழுவாகத் துடிக்க துடிக்க சாகடித்ததை பார்த்த பிறகும் அப்படி செய்தவர்களை மன்னித்து அங்கேயே மீண்டுமாய் ஒரிசாவில் குஷ்டரோஹிகள் மத்தியில் தொடர்ந்து ஊழியம் செய்தார்களே... காசு பணத்திற்காக செய்தார்களா? இல்லை பேரும் புகழுக்காக, மாட மாளிகை கட்டுவதற்காக செய்தார்களா?

எங்கேயோ பிறந்து வளர்ந்த மதர் திரேசாவிற்கு நம்ம நாட்டு ஏழைப் பிள்ளைகள் மீது எவ்வளவு அக்கறை. நம்ம நாட்டுக்காரங்க யாராவது இப்படி முன்பின் தெரியாத வெளிநாட்டுக்குப் போய் இப்படி ஏழைகளுக்காக உழைத்திருக்கிறார்களா? இதையெல்லாம் ஏன் செய்தார்கள்? இயேசு கிறிஸ்துவினுடைய மாசற்ற அன்பை நம் தேசத்து மனிதர்கள் புரிந்து கொண்டு அவர்களும் இரட்சிக்கப் பட்டு பரலோக பிரஜையாக மாறணும் என்பதற்காகத்தானே?

ஒரு சீகன் பால்க் நம் தேசத்திற்கு வந்திருக்காவிட்டால், நமக்கு தமிழில் பைபிள் கிடைத்திருக்குமா? அவரை தரங்கம்பாடியில் இறங்கி கால் வைக்கக் கூட அனுமதிக்கலையே. பல எதிர்ப்பு களையும் மீறி இங்கு இறங்கி, நமது மொழியை கஷ்டப்பட்டுக் கற்றுக் கொண்டு பைபிளை தமிழில் மொழிபெயர்த்தாரே. மொழிபெயர்த்ததை அச்சடிக்க அவர் பட்ட பாடுகள் சொல்லி மாளாதே. இதையெல்லாம் யாருக்காக செய்தார்? நமது தேசத்தின் இரட்சிப்பிற்காகத்தானே?

இப்படி ஒன்றா இரண்டா எத்தனையோ நூற்றுக்கணக்கான மிஷனரிகளைக் குறித்து கூறிக் கொண்டே போகலாமே. ஆனால் நாம எப்படி இருக்கிறோம்? நம் அருகில் உள்ள எதிர் வீடு, பக்கத்து வீடு, பின் வீடு, தெருவில் உள்ளவர்களை ஜாதி பார்க்காமல் அத்தை, மாமா, சித்தப்பா, பெரியப்பா என்று உறவு முறை வச்சு கூப்பிடுகிறோம். ஆனால் அவர்களிடம் நாம் சுவிசேஷத்தை அறிவிப்பது இல்லை. ஆண்டவரின் அன்பைக் காட்டுவ தில்லை. நம்மோட சொந்த பந்தம், நண்பர்கள், கூட வேலை பார்க்கிறவர்கிட்டே இயேசுவைப் பற்றியோ, அவரிடமிருந்து நாம் பெற்ற நன்மைகளைக் குறிச்சோ, எதுவும் சொல்றது இல்லை. என்ன சொல்லுவாங்களோ, மதமாற்றம் பண்றீங்க, எங்களுக்கு

எங்க தெய்வங்கள் இருக்கு, நீங்க எங்க சாமிகளைக் கும்பிடுறீங்களான்னு சொல்றோமா என்று போன்று எதுவாகு எடுத்து படிகா சொல்லுவாங்களோங்கிற ஒரு தயக்கத்திலேயே கவிஞர்களை அவர்களுக்கு அறிவிக்காம இருக்கிறோம். நம்ம ஊருக்காகவோ, மாவட்டம், மாநிலம், தேசத்திற்காக ஜெபிப்பதில்லை. நான் உனக்காக மரித்தேன். எனக்காக நீ என்ன செய்திருக்கிறாய் என்று ஆண்டவர் கேட்டா என்ன பதில் சொல்லப் போகிறோம்? ஆண்டவரோட வருகையின் போது, அவரை வெறும் கையோட சந்திக்கப் போறோமா? இல்லை கை நிறைய ஆத்துமாக் களோடயா? இன்றே ஒரு முடிவு எடுங்கள்.

தேசத்திற்காக தன் இன்னுயிரையும் அர்ப்பணிக்கத் தயாராக இருக்கும் ஆர்மி சகோதரர்களின் ஆத்தும பாரம், கடா? தேசத்து மிஷனரி எரிக்கின் ஆத்தும ஆதங்கம், கர்ணாடகாவிற்காக கல்வாரி ஜெபக்குழுவை ஆரம்பித்து ஆண்டுதோறும் இரண்டு மாவட்டங் களுக்காக அங்கே சென்று மூன்று நாட்கள் உபவாசித்து ஜெபிக்கிற அந்த ஆத்தும பாரம் நம் ஒவ்வொருவருக்கும் இருந்தால், நம் இனத்தார், குலத்தார், ஊர், தாலுகா, மாவட்டம், மாநிலம், தேசம் இயேசுவை அறியுமே. தேசம் சந்திக்கப்படுமே. தேசம் கர்த்தருக்கு சொந்தமாகுமே. இன்றே நாம் நல்லதொரு முடிவெடுப்போமா?

★

ஆசிரியர் குறித்து

[illegible] 73 வயது [illegible] இந்திய [illegible] 36 ஆண்டுகள் இந்தியாவின் பல பகுதிகளிலும் பணியாற்றிய [illegible] 6 ஆண்டுகள் [illegible] இந்திய [illegible] 5 ஆண்டுகள் பணியாற்றியவர். [illegible] நிகழ்ச்சிகள், பாட்டு, [illegible] வெற்றிக் கொடி நாட்டியவர். [illegible] முதன் முதலாக [illegible] படுத்தியவர். [illegible] திறமையால் [illegible] வைராக்கியமுள்ள இந்துவாகவும், இயேசு [illegible] இருந்தார். தேவன் இவரையும், இவர் குடும்பத்தாரையும் தெரிந்து கொண்ட விதம் மற்றும் இவரின் [illegible] வாழ்க்கையில் இயேசு [illegible] அற்புதங்களையும், நன்மைகளையும் சாட்சியாக பல பொதுக் கூட்டங்களிலும் 2500க்கும் மேற்பட்ட திருச்சபைகளிலும் கூறி வருகிறார். இவரின் சாட்சியும், செய்தியும், இவர் எழுதிய சாட்சி புத்தகமும் மற்ற நூல்களும் [illegible] இருதயத்தையும் உடைப்பதாக, உயிர்ப்பிப்பதாக, [illegible] மூட்டுவதாக, [illegible] பலப்படுத்துவதாக, [illegible] ஆத்தும ஆதாயம் செய்பவர்களாக மாற்றுகின்றது என்றால் அது மிகையல்ல. கர்த்தர் தமது நாம மகிமைக்கென்று இவரையும், இவரது குடும்பத்தாரையும் விசேஷமாக தெரிந்து கொண்டுள்ளார்.

Sundar Prints 9840199777